வெளியீடு எண் 179.

# மதுரைத் திருப்பதிகங்கள்

[ தலச்சிறப்புடன் ]



THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASVATI MAHAL · TANJORE ·
T000644
rasvati Mahal Library. Thanjavur

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீரூர்; பூவின்
இதழகத் தனைய தெருவம்; இதழகத்து
அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்.



தருமபுர ஆதீனம்.

644



இந்நூல்

மகாசந்நிதானம்

ஆலவாய்ச் சொக்கர்க்கு அளித்த காணிக்கை.

13—12—48

வெளியீடு எண் 179.

உ

குருபாதம்

# மதுரைத் திருப்பதிகங்கள்

[ தலச்சிறப்புடன் ]

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவுள்ளப்பாங்கின்வண்ணம்

வெளியிடப்பெறுவது

பிரதிகள் 500.



ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமபுரம்.

# முகவுரை

பூவின் நாயகன் பூமகள் நாயகன்
காவின் நாயகன் ஆதிக் கடவுளர்க்கு
ஆவி நாயகன் அங்கயற் கண்ணிமா
தேவி நாயகன் சேவடி ஏத்துவாம்.

விரிதமிழ்க் கூடலும், கமலேயும், தருமையும் என்றும் நீங்காத ஞானசம்பந்தமுடையன. முந்நூறு ஆண்டுகட்கு முன்பு, பொற்றாமரையிலிருந்து, குருஞானசம்பந்தருடைய கைத்தாமரையிற்புக்கு, விராட் புருடனுடைய மூலாதாரத் தாமரையில் ஞானப்பிரகாசக் கதிரவனால் விளக்கம் பெற்று, ஞானசம்பந்தருடைய இதயத்தாமரையில் எழுந்தருளி, இன்று எல்லோருடைய இதயத்தாமரையிலும் இனிது வீற்றிருக்கின்ற, சொக்கலிங்கப் பெருமானை ஆன்மார்த்த பூஜாமூர்த்தியாகக்கொண்ட, திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து 25-வது மகாசந்நிதானம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்** நிகழும் சர்வதாரி ஆண்டு கார்த்திகைத் திங்கள் உஅ-ம் நாள் (13—12—48) சோமவாரத்தன்று ஆலாவாய்ச் சொக்கர் அடியிணைபரவ மதுரைக்கு எழுந்தருளியபொழுது, அன்பு மலராக அங்கயற்கண்ணி பங்கராகிய, சோமசுந்தரப்பெருமானுக்குச் சாத்திய காணிக்கை இப்புத்தகம்.

முதலில் மதுரையில் இறைவன் சௌந்தரபாண்டிய னாக அரசாட்சி ஏற்றதுமுதல் உள்ள புராணவரலாறு களும், பிறகு பாண்டியர்கள் நாட்டையும், மொழியை யும் பாதுகாத்துவந்த வரலாறுகளும், பின்னர் விஜயநகர மன்னர்கள் அரசாண்ட நிகழ்ச்சிக் குறிப்புகளும் தக்க உதாரணங்களுடன் குறிக்கப்பெற்றுள்ளன.

அடியேனை இப்பணியில் ஈடுபடுத்திய செந்தமிழ்ச் சொக்கர் திருவருளுக்கு என்றென்றும்கடப்பாடுடையேன்.

அன்பர்கள் இதனைப்பெற்று ஆலவாயண்ணலின் பேரருளால் இன்புற்று உய்வார்களாக.

பேரன்பனல்லன் பிழைசெய்யான் தானல்லன்.
ஓரன்பும் இல்லா உலுத்தனேன்—பேரன்பு
காட்டிஎனைக் காட்டியுனைக் காட்டிஇன்பத் தொட்டிலிலே
ஆட்டிவளர் சொக்கநா தா.

தருமபுரம்,
11—12—48.

இங்ஙனம்,
தருமபுர ஆதீனப் புலவர்,
ச. தண்டபாணி தேசிகர்.

# பொருளடக்கம்

முகவுரை

தொன்னூல் முன்னுரை ... ... க

[பரிபாடல்; அகநானூறு; கலித்தொகை; புறநானூறு; சிலப்பதிகாரம்; திருமுருகாற்றுப்படை; சிறுபாணாற்றுப்படை; மதுரைக்காஞ்சி; கல்லாடம்; பெரியபுராணம்; திருவிளையாடற் புராணம்]

திருஞானசம்பந்தரும்—மதுரையும் ... ... கரு
மூர்த்திநாயனாரும்—மதுரையும் ... ... உஉ
குருஞானசம்பந்தரும்—மதுரையும் ... ... உ௪
குமரகுருபரரும்—மதுரையும் ... ... உகூ
ஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனம் ... ... ௩உ
மதுரையைப்பற்றிய நூல்கள் ... ... ௩௪
மதுரையைப்பற்றிய குறிப்புகள் ... ... ௪0
வரலாற்றுத் தொடர்புள்ள ஊர்கள் ... ... ௪ரு
பாண்டியநாட்டு அரசியல் ... ... ௬எ
திருஞானசம்பந்தர் திருப்பதிகம் ... ... 1
திருநாவுக்கரசர் திருப்பதிகம் ... ... 31
திருவாசகம் ... ... 39
திருக்கோவையார் ... ... 40
பதினொராந் திருமுறை ... ... 41
சொக்கநாத வெண்பா ... ... 42
சொக்கநாதக் கலித்துறை ... ... 45
மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ... ... 48
க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ் ... ... 50
மதுரைக் கலம்பகம் ... ... 51
பரிபாடல் ... ... 52
திருப்புகழ் ... ... 53

சிவமயம்

# இவ்வரலாற்றுக்குறிப்பு முதலியனவற்றிற்கு எடுத்தாண்ட நூல்கள்.

---

அகநானூறு

அப்பர் தேவாரம்

கடம்பவன புராணம்

கல்லாடம்

கலித்தொகை

சம்பந்தர் தேவாரம்

சிலப்பதிகாரம்

சிறுபாணாற்றுப்படை

ஸ்ரீகாளத்தி புராணம்

சொக்கநாதக் கலித்துறை

சொக்கநாதவெண்பா

தருமபுர ஆதீன வரலாறு

தருமபுர ஆதீன பண்டார சாத்திரம்

தனிப்பாடற்றிரட்டு

திருக்கோவையார்

திருப்பணி மாலை

திருமுருகாற்றுப்படை

திருவாசகம்

திருவாலவாய் மான்மியம்

திருவிளையாடற் புராணம்

திருவிளையாடற்பதிற்றுப்பத்தந்தாதி

தென்னிந்தியசரித்திரம் (ஸ்மித்)

நம்பி திருவிளையாடற் புராணம்

நெடுநல்வாடை

பரிபாடல்

பாண்டிமண்டலசதகம்

பாண்டியர் வரலாறு

புறநானூறு

பெரிய புராணம்

மதுரைக்கலம்பகம்

மதுரைக்காஞ்சி

மதுரைச் சொக்கநாதருலா

மதுரைத் தலவரலாறு

மதுரைநாயக்கர் வரலாறு

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

மதுரை மும்மணிக்கோவை

மதுரை ஜில்லா கெஜட்டியர்

வில்லி பாரதம்



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன ஸ்தாபகர்
ஸ்ரீ-லஃஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

# மதுரைத் தலச்சிறப்பு

## தொன்னூல் முன்னுரை :

செந்தமிழ்ப் பாண்டிநாட்டைச் சிந்தை செய்தால் "பாண்டிநாடே பழம்பதி யாகவும்", "தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே", "தென்னாடுடைய சிவனே போற்றி" என்ற அருள் மொழிகள் நினைவிற்கு வருவனவாம்.

பாண்டிநாட்டின் தலைநகராகிய மதுரையை நினைக்கின்றகாலத்து "மதுரைப் பெருநன் மாநகர் இருந்து, குதிரைச் சேவகனாகிய கொள்கையும்", "ஆடக மதுரை அரசே போற்றி, கூடல் இலங்கு குருமணி போற்றி", "கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை", "உயர்மதிற் கூடலினாய்ந்த ஒண்டீந் தமிழின் துறை" என்பன முதலிய அருண்மொழி களும் நினைவிற்கு வரும்.

சுருங்கக் கூறில் உடலும் உயிரும் போன்றது மதுரையும் சிவமும் என்பது புலனாம். இக்கருத்தைக்

கல்லாடம் "பெருநீர் வையை வளநீர்க் கூடல், உடலுயிர் என்ன உறைதரு நாயகன்" என்று விளக்குகிறது. மற்றும் "தமிழொடு பிறந்து பழ மதுரையில் வளர்ந்தகொடி", "நறைபழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே", "தமிழ் மதுரைக்கு அரசே", என்பனபோன்ற பலசொற் றொடர்கள் நினைவிற்குவந்து மதுரையோடு-அங்கயற் கண்ணியம்மையையும், அமுதத்தமிழையும் நினை விற்குக் கொண்டுவரும். இவற்றையெல்லாம் ஒரு சேர நோக்குமிடத்து மதுரையும், சொக்கலிங்கப் பெருமானும், மீனம்பிகையும், செந்தமிழும் ஒன்றை விட்டு ஒன்று பிரியாதன என்பது நினைவிற்குவரும். எங்கள் தெய்வக் கவிஞர் குமரகுருபர சுவாமிகள் "உலகமெலாம் பெற்றதாய் மகளானதும், பிறப்பில் பெருமான் அரசனானதும், தண்ணளி தவழும் சண்முக முருகன் உக்கிரப்பெருவழுதி யானதும், தண்டமிழ்மதுரம் கொழிக்கும் மதுரையிலே" என்று அருளிச் செய்கின்றார். மதுரையின் இனிமையும், தமிழ்வளமும், அங்குள்ள புலவர்களின் பண்பாடும், தமிழ்ப்பின் சென்ற தாழ்சடைப்பெருமான் புலவர் கட்குத் தண்ணளி செய்யும் எளிமையும் நேரில் அநுபவித்த நக்கீரர் பிரியநேர்ந்த வொருகாலத்து,

என்றினி மதுரை காண்பேம் எப்பகல் சவுந்த ரேசன்
தன்திரு வடிகள் காண்பேம் தாயைஎஞ் ஞான்று காண்பேம்
வென்றிவேல் தரும வேந்தர் வேந்தனை எந்நாள் காண்பேம்
ஒன்றுயிர்த் துணையாம் சங்கத்(து) உறவை எப்பொழுது காண்பேம்.

என்று கூறினர். இவர் பிறந்து வளர்ந்த தலமாய் இருந்தும்-பலநாள் பழகிய தலமாயிருந்தும் விட்டுப் பிரிய வருந்தினரெனின் மதுரையின் இனிமையை என்னென்று கூறுவது. அத்தகைய மதுரையைப் புலவர்கள் தம்மதிக்கோலால் அளந்து, சொல்ஏரால் நல்வளம்படுத்தி, அறிவுநீர் பாய்ச்சி, கவிதைப்பயிர் தழையச் செய்யாமலிருப்பார்களா? அவர்கள் இட்ட பயிர்தானே, இரண்டாயிரம் ஆண்டுகளாகியுங்கூட இன்றைக்கும் எல்லாரும் இளமைநலம் துய்க்கும் வண்ணம் சிவபோகத்தை-அறிவமுதத்தையளித்து வருகிறது. சங்கம் வளர்த்த பாண்டியர் தலைநகரா புலவர் நாவிற் பொருந்தாதொழியும்?

முற்றுமுணர்ந்த கற்றைச்சடையான் தமிழ் விருப்பால் ஆடைமாற்றி வேடம்பூண்டு 4440ஆண்டு கள் ஆராய்ந்தார் என்றால் அதனையா புலவர்கள் பாடாதொழிவர்! மதுரையில் வீசும் காற்று வெறும் பொதியக்காற்றா? தமிழ் இனிமை கலந்த காற்று அல்லவா! தென்றலுக்குத் தண்மையும் மென்மை யும் மணமுமே குணங்களாகப் புலவருலகம் கூறிவந் தது. மதுரைக்காற்றில் தமிழ் மதுரமும் கலந்திருப் பதைக் கண்டபின் இனிமையையும் சேர்த்தல்லவா நான்கு குணமாக எண்ணும்! ஆகாயத்து இடம் பெற்றஒலி தமிழொலி. சங்கத்தமிழொலி. ஞானப் பாலுண்ட மோனப்பிள்ளையின் வாயிலிருந்துவந்த தெய்வத்தமிழொலி. கருவாயிலடைக்கும் திருவா சகத் தேனொலி. கந்தன் அருளை முந்துறப்பெற்ற அருணகிரியாரின் ஆண்மையொலி! ஆகாயமட்டுமா?

என்? பொற்றாமரையைச் சுற்றியுள்ள கம்பமெல் லாங்கூடச் செந்தமிழறியும். பரஞ்சோதிமுனிவரும்,

"யார் அறிவார் தமிழருமை என்கின்றேன் என்
அறிவீனமன்றோ உன் மதுரைமூதூர்
நீர் அறியும் நெருப்புஅறியும் அறிவுண்டாக்கி
நீ அறிவித்தால் அறியும் நிலமும்தானே"

என்றருளினர். இத்தகைய மதுரையைப் பற்றிப் பொய்யடிமையில்லாத புலவர்கள் புகழாது ஒழிவார்களா? அவர்கள் "செய்யுள்நிகழ் சொற்றெளிவும் செவ்வியநூல் பலநோக்கும் மெய்யுணர்வின் பயனும் இதுவே" எனத் துணிந்து, நீலகண்டப்பெருமானது திருவடிக்கே ஆளானவர்கள் அல்லவா? ஆதலால், மதுரையைப்பற்றிப் புலவர் பெருமக்கள் என்ன கூறியிருக்கின்றார்கள் என்பதை ஆராய்தல் ஈண்டு ஏற்புடையதொன்றாம்.

பரிபாடலில் :

ஒருபுலவர் தம்மினத்தையே வணிகர்களாக ஆக்கினர். அவர்கள் கையிலே அறிவுத் தராசை அளித்தார். அவர்கள் தம்தொழிலைத் தொடங்கி விட்டார்களாம். ஒருதட்டிலே மதுரையை இட்டார்கள். மீதமுள்ள உலகம் எல்லாவற்றையும் சேர்த்து ஒருதட்டிலே இட்டார்கள். தூக்கினர்கள். தாழ்ந்தது மதுரைத்தட்டு. எதனல்? அருளும் பொருளும், புலமும் நலமும் ஆகிய கனத்தால். இந்நிலையினை நன்கு விளக்கி,

"உலகம் ஒருநிறையாத் தானோர் நிறையாப்
புலவர் புலக்கோலால் தூக்க—உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்"

என்று தாம் ஒருதூக்கில் நிறுத்தினார்.

மற்றொருவர், மதுரையைத் திருமாலின் கொப்பூழில் பூத்த தாமரையாகக் காட்டுகிறார். தாமரை மதுரை. இதழ்கள் தெருக்கள். இதழ்களின் நடுவில் உள்ள பொகுட்டு சோமசுந்தரப்பெருமான் எழுந்தருளியிருக்கிற கோயில். அந்தப்பூவின் மகரந்தம் தமிழ்க்குடிகள். புலவர்கள் வண்டுகள். இவ்வாறாகத் தாமரைக் காட்சியிலேயே மதுரையை அமைத்துக் காட்டினார். இன்னும் இம்மதுரை எந்தத் தலைநகருக்கும் ஒப்பாகாதது. மிக உயர்ந்தது. வஞ்சியும் உறையூருமாகிய சேரசோழநாட்டுத் தலைநகர்களில், "விடியற்காலம் வந்துவிட்டது; மக்களே! விழித்தெழுங்கள்" என்று கோழிகள் கூவி அறிவிக்கும்; மதுரையிலோ வேதஓசையைக் கேட்டு மக்கள் விழித்தெழுவார்கள் என்கின்றார். என்னே ஏற்றம்!

மற்றொருவர், பொதியமுள்ளவரையில் மதுரை, தமிழ்நாட்டகமெலாம் நிலைபெற்ற புகழை விளங்கச் செய்வதல்லது அதிற் குறைவுபடுமோ? என்கிறார்.

மற்றொருவர், இந்தமதுரை திருமகள் நெற்றியில் தீட்டிய திலகம். இந்தவையை உள்ளவரையில்

இது புகழ்விளைத்தலேயன்றிப் பொய்க்குமோ எனக் கூறுகின்றார்.

மற்றொருவர், கார்த்திகைமாதர் காதில் விளங்குகின்ற குண்டலம் போலச் சிறப்போடு அழகுமிக்கு விளங்குவதல்லாமல், பாண்டியன் ஆணை இருக்கிற வரையில் மதுரை சொத்தையாய்ப் போகுமோ? என்கின்றார்.

மற்றொருவர், உலகத்திலே எல்லா இன்பங்களோடும் வாழ்பவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் கொடுப்போர்களைக் கொண்டாடி, வாங்குபவர்கள் வருவார்களோ என்று வழியைப் பார்த்துப்பார்த்து மகிழ்கின்ற மாடங்கள் நிறைந்த கூடலிலும் திருப்பரங்குன்றத்திலும் வாழ்பவர்களே; மற்றவர்களே தெய்வலோகத்து இன்பத்தைப் பெரிதென்று மதிப்பவர்கள் என்கின்றார்.

அகநானூற்றில் :

பொன்னாற் செய்யப்பட்ட வேப்பமாலையணிந்த பாண்டியர்க்கு வழிவழியாக உரிமையுடையது இம் மதுரை. புதிதாக மணந்த பெண்ணினது கூந்தலையும் நெற்றியையும் போலக் கடைத்தெருக்கள் பல வேறு மணங்களும் கலந்து கமழுகின்றன. மதுரையில் திருவிழாக்கள் இல்லாத நாளே கிடையாது. பாண்டியனது கயற்கொடியானது இடங்கடோறும் விளங்குகிறது. இம்மதுரை, போர்களில் வென்று

அழியாப்புகழ்கொண்ட அரசனின் ஆட்சிக்குரியது. பலநாடுகளையும்வென்று தமதாக்கிக்கொண்ட பசும்பூண்பாண்டியனுக்குச் சொந்தமானது; பொன் மலிந்தது; புகழ்மலிந்தது; இசை மிக்கது; மலையை யொத்த அரண்மனைகள் பலவற்றையும் உடையது என்று பல புலவர்கள் பேசுகின்றார்கள்.

கலித்தொகையில்:

புலவருடைய தெளிந்த அறிவுக் கடலிலிருந்து கடைந்தெடுக்கப்பட்டு, நாவின்வழியாகச் சொட்டுகின்ற சொல்லமுதத்தைப் புதிது புதிதாக உண்கின்ற பெரும்பேறு படைத்தவர்கள் மதுரைமக்கள் என்று ஒருவர் வியக்கின்றார்.

உலகிலுள்ளார் அனைவரும் மாடமாளிகையின் அழகைக்கண்டு பாராட்டுகின்றார்கள். அம்மட்டோ; "கலிகெழு கூடல்", "ஒலிகெழு கூடல்" முதலியவற்றின் விரிவை மதுரைக்காஞ்சி மிக அழகாக எடுத்துக்கூறி மதுரையில்உள்ள எல்லா ஒலிகளையும் பலவகைப்பட்ட புள்ளினங்களின் ஒலிகளுக்கு ஒப்பிட்டிருக்கிறது. மற்றும் கலித்தொகை "ஆனைச் சீர்கூடல்", "புகழ்பார்க் கூடல்", "நீர் உயர் கூடல்" என்றும் பேசுகிறது. திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும் தான் சௌந்தரபாண்டியனா யிருந்து அரசாண்டு கொண்டிருந்தும், வேற்றரசனாகிய சேரமான்பெருமாளுக்குச் சீட்டுக்கவி கொடுத்துப் பாணபத்திரனைப் பரிசிற்காக அனுப்பும் பொழுது

தன் ஊரை "மதிமலிபுரிசை மாடக்கூடல்" என்று சொல்லிக்கொள்கின்றார்.

மற்றோரிடத்திலே, கலித்தொகை, வையை பெருக்கெடுக்கிறது. மதுரையினது மதிலைப்போய் மோதுகின்றது; என என்றும் சண்டையேயில்லாத மதுரைக்குச் சண்டையைக் கற்பிக்கிறது.

புறநானூற்றில்:

மதுரை அடைமொழியின்றி அறிவிக்கப்படுவதில்லை. 'மாடமலி மதுரை' என்றும், 'வானத்தன்ன வளநகர்' என்றும் அறிவிக்கப்படுகின்றது. காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக்கண்ணனார் என்னும் பெரும் புலவர், சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருநாள் ஒருங்கிருக்கக் கண்டார். இவர்கள் ஒற்றுமை சூரியசந்திரருடைய ஒற்றுமை போன்றதல்லவா? இவ்வொற்றுமை நீடுவாழவேண்டும் என்கிற பெருநோக்கோடு இருவரையும் மாறிமாறிப் புகழ்கின்றவர், தாம் சோழநாட்டவராயிருப்பதால் தன்னரசன் தலைநகரையே மிகமிகச் சுருக்கமாக—குறிப்பாக—ஆழமாக, "அறந்துஞ்சு உறந்தை" என்று எடுத்துக்காட்டி, மதுரையின் ஏற்றங் கூறுகின்றவர், நெல்லும் நீரும் எல்லார்க்கும் எளியன என்று எண்ணிப் பொதியமலையிற்பிறந்த சந்தனத்தையும் தென்கடற்பிறந்த முத்தையும், கொடையும் படையும் மணமும்,

ஆகிய மூன்றுவகையான முரசங்களும் முறையே ஒலிக்க ஆளப்படுகின்ற தமிழ்மதுரைக்குத் தலைவன் என்கின்றார். இங்ஙனம், மனம்வேறுபட்ட ஒத்த பதவிகளில் உள்ள இருவரை ஒற்றுமைப்படுத்த ஏற்றமுறைகள் இவை, ஏலாதன இவை என்பதைப் புலவர்களே அறிவர். அவர்கள் இட்டவித்திலிருந்து தான் ஒற்றுமையும் வளர்ந்து பயனளிக்கின்றது என்பதை உலகம் உறுதியாக உணரவேண்டும் என்பதே இதன் நோக்கம்.

சிலப்பதிகாரத்தில் :

கோவலன், இழந்த பணத்தைத்தேடி, இனிமேலாவது இல்லறத்தை ஒழுங்காக நடத்தவேண்டும் என்ற கருத்தினனாகக், கற்பிற்சிறந்த கண்ணகியையும் அழைத்துக்கொண்டு மதுரைக்குப்போகிறான். வழியில் மதுரையின் வெளிநகரிலே தங்குகிறான். அங்கே வந்த பாணரோடு அளவளாவி இசைநூல் நுணுக்கத்தை ஆராய்ந்துகொண்டிருக்கும்பொழுது "மதுரை இன்னும் எவ்வளவுதூரம் இருக்கிறது?" என்று கேட்கிறான். அவர்கள் "மதுரையா! இதோ இருக்கிறது! தென்றற்காற்று கலவைச் சந்தனச் சேற்றினிலே ஆடிச் செங்கழுநீர்முதலிய மலர்களாற் செய்த மாலையிலும், மல்லிகை முல்லை முதலியவைகளாலாகிய படுக்கைகளிலும் பொருந்திச் சமயல் புகையும், மோதகப்புகையும், அப்பப்புகையும், அகிற்புகையும், ஆகுதிப்புகையுமாகிய பல புகையோடும் கலந்து, பொதியக்காற்றைப் போலாது,

கலவைக் காற்ருக வருகிறது; பாருங்கள்! ஆதலால் மதுரை மிக அணிமையிலே இருக்கிறது! நீங்கள் புதியவராயிருந்தாலும் உங்களை யாரும் தடுக்கமாட்டார்கள்; நீங்கள் சந்தேகமில்லாமற் செல்லலாம்" என்று அறிவிக்கின்ருர்கள். கோவலனும் யானைகள் நீர் குடிக்கவருகின்ற சுருங்கைவழியாக உட்புகுகின்ருன். அங்கே, யவனர்கள் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள். இவன் அவர்களைக் கண்டு கொஞ்சமும் அஞ்சாமல் வாயிலைத்தாண்டி, பழக்கப்பட்டவன்போலப் உட்புகுந்தான். மதுரையின் உள் அமைப்பைக் கண்டான். இந்திரனுடைய ஆபரணப் பெட்டியைத்திறந்து வைத்ததுபோல அது இருந்ததாம். இதனைக் கவிஞர்,

> "ஆயிரங் கண்ணோன் அருங்கலச் செப்பு
> வாய் திறந்தன்ன மதிலக வரைப்பு"

என்கின்ருர். உள்ளே அரசர்வீதி அங்காடிவீதி முதலியன அடுக்கடுக்காகக் காட்சி அளித்தன. இவற்றைக் கண்ட கோவலன் புறஞ்சேரியையடைந்து, கண்ணகியை மாதரியிடம் ஒப்படைத்துவிட்டுச் சிலம்பு விற்கத் திரும்பவும் நேர்வழியாகப் புகுகின்ருன். கோட்டைவாயிலிலும் மதில்மேலும் எந்திரவில்கள் இருந்தன; குரங்குபோல வருவார் போவாரைக் கடித்துக்கொல்லும் பொறிகள்காணப் பெற்றன; கல்வீசும் கவண்கள் தொங்கின; பகைவர் மேல் மொண்டு வீச இரும்பும் செம்பும் உருக்கிய ரானைகள் விளங்கின; கூடை நிறையக் கற்களும்,

கழுத்திற்பூட்டி முறுக்கும் சங்கிலியும் காணப் பெற்றன; பன்றிபோல, மீன்கொத்தி குருவிபோல, யானைபோல, மூங்கில்போல இருந்து ஒறுக்கும் பொறிகளும் இவன் கண்ணிற்பட்டன. இங்ஙனம் பொறிவடிவாகிய மதுரையைப் பொறிவழியாகக் கண்டுபுகுந்தான் என்று மதுரையின் பலவேறு வகையான படைகளும் பண்புகளும் அறிவிக்கப் படுகின்றன.

திருமுருகாற்றுப்படையில் :

திருப்பரங்குன்றம் மதுரைக்கு மேற்கே இருக்கிறது என்பதை அறிவிக்கவந்த நக்கீரர், பாண்டியன் எல்லோரையும் வென்று வெற்றிவீரனாக விளங்குவதால் போரேயில்லாத வாயிலையுடையது; திருமகள் சிறிதும் அசைந்து கொடுக்காத அங்காடி வீதிகளையுடையது; மாடங்களையுடையது; பாண்டிய மன்னர்கள் தங்களுடைய வீரத்திலும் வெற்றியிலும் வைத்திருக்கின்ற பெருமதிப்பினால் தாங்களே ஆடவரென்றும் மற்றசேரசோழமன்னர்களெல்லாரும் மகளிர்கள் என்றும் எண்ணியவராய் அவர்கள் விளையாடுவதற்காக அரசகோபுரத்தின் இருபக்கத்திலும் தோரணகம்பங்கள் நிறுத்தி, அதிலே கயற்கொடியை ஏற்றி, அதன்பக்கத்திலே பந்து கழங்கு பாவை இவற்றைத் தொங்கவிட்டிருக்கிற சிறப்பினை உடையது என்று கூறியுள்ளார்.

சிறுபாணாற்றுப்படையில்:

மதுரைப்பதியின் தெருக்களெல்லாம் தேனால் நனைந்து வழுக்குகின்றன. மதுரையிலேயே தமிழ் நிலைபெற்றுள்ளது என்று அறிவிக்கப் பெற்றுள் ளது. இந்தச் சிந்தனையைப் பிற்காலத்து நூலாகிய பாரதத்து,

“பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்(து)
இருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்து ஓர்ஏன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்”

என்றபாட்டால் கவிஞர் மகன் கவிஞன் மேலும் அழகுபெற அறிவிக்கிறான்.

மதுரைக்காஞ்சியில்:

மதுரையில் காணும் மாலைத் தோற்றத்தினை ஆசிரியர் அழகுபெறக்காட்டுகிறார். மாலைநேரத்தில் பேரிளம் பெண்டிர்கள், தாமரைப்பூவைக் கையி லேந்திச் செல்வாரைப்போலத் தத்தம் குழந்தை களைக் கையில் அணைத்துக்கொண்டு, கணவரையும் அழைத்துக்கொண்டு பூசைக்கு வேண்டும் பொருள் கள் எல்லாவற்றையும் சேகரித்துக்கொண்டு ஆசார மாகக் கோயிலுக்குச் செல்கிறார்கள். பௌத்தப் பள்ளியும், சினகிருகங்களும், இறைவன் கோயிலும் அங்கங்கே விளங்குகின்றன. எல்லாவகையாலும்

புகழ்ப்பெறுகின்ற மதுரையானது தெய்வலோகம் போல விளங்கிக்கொண்டிருக்கிறதென அறிவிக்கப் பெறுகின்றது.

கல்லாடத்தில் :

மதுரை, பொன் பூ முதலிய மங்கலச் சொல்லை முதலாகக்கொண்டு பெரும்புலவர் வாயில் இருந்து எழுந்த பாட்டைப்போல, உலகத்திற்கே மிகமிக இன்பம் பயக்கும் வையையாற் சூழப்பட்டது. வையை பலவுயிர்களையும் படைத்து எங்கும் பரப்புகின்ற பிரமனைப் போன்றது. காப்பதால் திருமாலை யொத்தது. கரைக்கு அடங்கி அழித்தல் தொழிலைச் செய்தலாலும், நீரைத் தரித்தலாலும் சிவபெருமானை யொத்தது. மரங்களும், மணிகளும், சங்கங்களும் நிரம்பப் படைத்தமையால் இந்திரனை யொத்தது. முத்தீ வழிபாடு செய்யும் முனிவர்பெருமக்கள் நீராடி வேதமந்திரங்களைச் சொல்லி நீரையிறைத்தலால் அந்தணர்களை யொத்தது. மீனக்கொடியையும், ஐந்திணை கூடிய அமுதத் தமிழையும், செல்வம் நீங்காத மதுரையையும் கூடியிருத்தலால் பாண்டிய மன்னனை யொத்தது. நவமணிகளை எடுத்துப் பரப்பி விலைமதிப்பிடுவதால் வணிகனைப் போன்றுள்ளது. உழவுத் தொழிலும், விதையும், நாற்றும் தழைக்கச் செய்தலால் வேளாளர்களை யொத்தது என்று அறிவிக்கப் பெற்றுள்ளது. சிலப்பதிகாரத்தில் "புனல்யாறு அன்று; இது பூம்புனல்யாறு" என்றும், "வையை யென்னும்

பொய்யாக் குலக்கொடி'' யென்றும் பாராட்டப்பெற்றுள்ளது. வையைக்கென்றே பரிபாடலில், எட்டுப் பாடல்கள் அதன் இயற்கையை—வளத்தை யறிவிப் பனவாக அமைந்துள்ளன.

பெரியபுராணத்தில் :

பாண்டியநாடு செல்வக் குடிகள் சிறந்து விளங்குவது. அன்பர்கள் பலராலும் போற்றப் பெறும் இறைமையும், தொன்மையும் படைத்தது. இக்கருத்து ''பாண்டியநாடே பழம்பதியாகவும்'' என்ற மணிவாசகத்தை உட்கொண்டு எழுந்த தல்லவா? சந்தனச்சோலையோடுகூடிய பொதியமலை யிற் பிறந்த மந்தமாருதமும், தெய்வத் தமிழுங் கலந்து மதுரைக்கு அழகையும், தன்மையையும், மணத்தையும், மென்மையையும் அளிக்கின்றன. மதுரையைத் தெய்வத் தாமரையாக எண்ணி அலை மகளும், கலைமகளும் அகல்வதே யில்லை யென்று மதுரையின் மேன்மை அறிவிக்கப்பெற்றுள்ளது. இன்னும் மதுரைத் தமிழை ''ஞாலமளந்த மேன் மைத் தெய்வத்தமிழ்'' என்று அறிவிக்கின்றது.

திருவிளையாடற் புராணத்தில் :

பரஞ்சோதி முனிவர் காட்சிக்குப் பாண்டிய ஞடு ஓர் அழகிய இளம்பெண்ணைகத் தோற்றமளிக் கிறது. அந்த நாட்டு மகளுக்கு முகம் மதுரை. பரங்குன்றுங் கொடுங்குன்றுங் கொங்கைகள்.

திருச்சுழியல் கொப்பூழ். வயிறு குறு ஆலம் (குற்றாலம்). செங்கை ஏடகம். மேனி பூவ(ண்)ணம். தோள் வேய்வனம் (மூங்கிற்காடு — நெல்வேலி) யென்று அங்கங்களை விதந்தெடுத்துக் காட்டுகிறார்.

மதுரை, புடைநகர் இடைநகர் அகநகரென மூன்று பகுப்பினை யுடையது. அகநகரிலே பரத்தையர் வீதி, வேளாளர் வீதி, வணிகர் வீதி, அரசர் வீதி, மறையவர் வீதி, சைவர் வீதி இவைகள் முறையே ஒன்றற்கொன்று உள்ளாக அமைந்திருக்கின்றன. புண்ணியஞ் செய்கின்ற இடம் மண்ணுலகென்றும், அப்புண்ணியத்தின் பயனை அநுபவிக்கும் இடம் விண்ணுலகமென்றும் பெரியோர்கள் சொல்வார்கள்; ஆனால் இரண்டையும் ஒருசேர நிகழ்த்தும் இடம் மதுரையே. மதுரைச் செல்வர்களுக்குப் பொழுதுபோக்கு அங்கயற்கண்ணியொடு கூடிய சொக்கலிங்கப் பெருமானை மூன்று போதும் வழிபாடு செய்வதும், பூசை செய்வதும், திருவிளையாடல்களைக் கேட்பதும், சிந்திப்பதும், அடியவர்களுக்கு வழிபாடு செய்வதுமேயாகும் என்பன முதலிய பல மேன்மைகள் நகரப்படலத்தாலும், தலவிசேடப் படலத்தாலும் அறிவிக்கப்படுகின்றன.

உ
சிவமயம்

# திருஞானசம்பந்தரும்-மதுரையும்

சிவம்பெருக்கும் திருஞானசம்பந்தப்பெருமான் அப்பரடிகளோடு திருமறைக்காட்டில் எழுந்தருளி இருக்கின்றார். அப்பொழுது பாண்டியநாட்டிலே சமணப்புதர்மூடி, சைவப்பயிரை மறைத்தது. கூன் பாண்டியனும் உடற்கூனைப்போல அறிவிலும் கூன் பட்டுச் சமணமதத்தைச் சார்ந்தான். மதுரை முழுவதும் தலைபறித்தவர்களும் பாயுடுத்தியவர்களும் பீலிவிரித்தவர்களுமாக அலையத் தலைப்பட்டுவிட்டார்கள். அதனைக்கண்ட பாண்டிமாதேவியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் மிகவும் கவலைப்பட்டார்கள். சோழநாட்டில் உலகு உய்ய அவதரித்த ஆளுடையபிள்ளையார் திருமறைக்காட்டில் தங்கி இருக்கின்றார் என்று கேள்வியுற்றார்கள். பரிசனங்களை ஏவி அழைத்துவரச் செய்தார்கள். சென்ற பரிசனங்கள் பிள்ளையாரிடம் விண்ணப்பித்துக் கொள்ள, பிள்ளையார் அப்பரிடம் சென்று மதுரை நிகழ்ச்சியை அறிவித்தார். கேட்ட அரசு "அந்த அமண்கையர் வஞ்சனைக்கோர் அவதியில்லையே; இப்போது நாளும் கோளும் நல்லனவாக இல்லையே; செல்லுதல் வேண்டாம்" என்றார். பிள்ளையார் பரசுவது நம்பெருமான் கழல்களென்றால் பழுதடையாது எனப் பகர்ந்தனர். "வேயுறு தோளி" என்றெடுத்துத் திருப்பதிகம்பாடினார். மதுரையை அடைந்தார்.

திருஞானசம்பந்தப்பெருமான் எழுந்தருளிய உடனேயே அமணர்களுக்குத் துர்ச்சகுனங்கள் பல தோன்றின. தீக்கனவுகள் கண்டனர். இந்நிலையில் மங்கையர்க்கரசியாருக்கும் குலச்சிறையாருக்கும் நன்னிமித்தங்கள் காணப்பெற்றன. ஏவலாளர் ஓடி வந்து, திருஞானசம்பந்தப்பிள்ளையார் எழுந்தருளியிருக்கிறார் என்று அமைச்சருக்கும் அரசிக்கும் தெரிவித்தார்கள். அமைச்சர், அரசியின் உத்திரவு பெற்று, மதுரையின் புறத்தேசென்று, தமிழ்மறை தந்தருளிய தண்ணளி யந்தணரை எதிர்கொண்டு அழைத்துவந்தார். அரசியார், தாமும் சென்று வரவேற்றார். வணங்கினார். பிள்ளையார் "செம்பியர் பெருமான் குலமகளார்க்கும் திருந்திய சிந்தையீர்! நுமக்கும் பெருமான் திருவருளால் நலமோ?" என்று வினவினார். அமைச்சரும்,

"சென்றகாலத்தின் பழுதிலாத் திறமும்
இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்றெழுந்தருளப் பெற்றபேறிதனால்
எற்றைக்கும் திருவருளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்தியநாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம்"

என்று மறுமொழிபகர்ந்தனர். ஆலவாயண்ணலைத் தரிசிக்கும் ஆதரவினால் திருஆலவாய் எங்குள்ளதென்று ஆளுடையபிள்ளையார் வினவ, இதோ

என்று அமைச்சர் சுட்டிக்காட்ட "ஆலவாயாவதும் இதுவே" என்ற இறுதியையுடைய திருப்பாடல்களை அருளிச்செய்துகொண்டே கோயிலுட் புகுந்தார். பெருமானைக் கண்டார். அவர் ஏத்திய முறையை அறிவிப்பது இந்தப்பாடல்,

"அங்கம் எட்டினும் ஐந்தினும் அளவின்றி வணங்கிப்
பொங்கு காதலின் மெய்மயிர்ப் புளகமும் பொழியும்
செங்கண் நீர்தரும் அருவியும் திகழ்தருமேனி
எங்குமாகிநின் றேத்தினார் புகலியர் இறைவர்"

பின்னர் 'நீலமாமிடற்று' என்னும் திரு இருக்குக் குறளை ஓதி வழிபட்டு அமைச்சர் காட்டிய திரு மடத்தில் பரிசனங்களோடு அமர்ந்தார்.

அமைச்சர் எதிர்கொண்டு அழைத்ததையும் அரசியார் ஆலயத்துட்சென்று வணங்கியதையும் கேள்வியுற்றும், ஆங்காங்குத்திரிகின்ற சைவப்பெரு மக்களைக் கண்ணுற்றுக் கண்டும், பதைத்துப் புழுங்கிய அமணர்கள் ஒன்றுகூடி ஆலோசித்தார்கள். நம் மந்திரத்தால் மடத்தில் தீ வைத்துவிடுவோம். பின் அச்சிறுவர் இங்கு இருக்கமாட்டார்; போய் விடுவார் என்று மனக்கோட்டை கட்டினார்கள். எண்ணியதை நிறைவேற்றினார்கள். ஆனால் ஐந் தெழுத்தோதும் அன்பர் இருக்கும் திசையிலாவது ஏனையமந்திரங்கள் பலிக்குமா? ஆதலால் தங்கள் மந்திரம் பலியாது போகவே திருமடத்தில் நெருப்பு வைத்தனர். திருமடம் தீப்பற்றியதைக் கண்ட

ஞானசம்பந்தப்பிள்ளையார் "செய்யனே திருவால வாய்" என்று தொடங்கிப் "பையவே சென்று பாண்டியர்க்காக" என்று ஆட்சி முறை பிழைத்த அரசனுக்கு ஆக்கினர். அரசன் வெப்புநோயால் வாடினன். மருத்துவர்கள் தங்களால் ஆனவரை பார்த்து ஓய்ந்தனர். சமணர்கள் "நமோ அருகந் தாணம்" என்று சொல்லி நாப்புலர்ந்தனர். அவர்கள் மந்திரம் உரு ஏற ஏற அரசனுக்கும் வெப்பு ஏறிக்கொண்டே இருந்தது. நடுங்கிய அரசியார் அமைச்சரை நோக்கி அமணர் செய்த தீங்கு இவ்வாறு முடிந்ததென உணர்த்த, உணர்ந்த அமைச்சர் குலச்சிறையார் அரசன் முன் விழுந்து 'இந்தப்பிழை இவர்கள்செய்தகொடுமையால் விளைந்ததாதலால் ஞானசம்பந்தப்பிள்ளையாரை அழைத்தால் நோய்தீரும்' என்றார். ஞானசம்பந்தர்என்னும் நாமமந்திரம் செவியில் நுழைந்தபோதே அரசன் அறிவு தெளிந்து சமணர்களைப்பார்த்து, "சம்பந்தர் வருவதால் இந்தநோய் தீருமானல் பார்ப்பேன். வென்றவர் பக்கத்தில் விரைந்து சேர்வேன். அழையுங்கள்" என்று ஆணையிட்டான். அவ்வாறே அழைக்கச்சென்ற அரசியாரும், அமைச்சரும்,

"ஞானத்தின் திருஉருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்ப"

கண்டு வணங்க, "திருவுடையீர்! உங்கள்பால் தீங்கு

உளதோ'' என வினவ பிள்ளையாருக்கு, அவர்கள் ''ஐய! வஞ்சகர் செய்த தீத்தொழில்போய் அரசனுக்குத் தீங்காய் முடிந்தது. காத்தருள வேண்டும்'' என்று நிகழ்ந்ததை அறிவித்தனர். பிள்ளையார் கோயிலுக்குச்சென்று 'வாதுசெய்யத் திருவுள்ளமே' என்ற பதிகம்பாடி வேண்டிக்கொண்டு அரண்மனை அடைந்தார். உட்சென்றார். அரசனும், நிலத்திடை வானினின்று நீளிருள் நீங்கவந்த கலைச்செழுந்திங்கள் போலும் கவுணியச் செல்வர்க்கண்டான். குறையிரந்தான். கருணைவெள்ளமாகிய பிள்ளையார் ஆலவாயண்ணல் திருநீறே மந்திரமும் மருந்துமாய்த் தீர்ப்பது என்று திருநீற்றுத் திருப்பதிகம் பாடித் திருநீறுகொண்டு வலப்பக்கத்தில் பூசினார். வெப்பந் தணிந்தது. அரசனுடைய இடப்பாகம் மிகுந்தது. அரசன் அவதிப்பட்டு மீண்டும் வேண்டிக்கொள்ள அப்பக்கத்தையும் பிள்ளையார் ஒருதடவை நீறுகொண்டு தடவ, அரசனுடைய வெப்பம் முழுதுந் தணிந்தது. ஞானசம்பந்தர் பாதம்நண்ணி, நான் உய்ந்தேன் என்றான்.

தமது சமயம் தோற்றமைக்காகப் பெரிதும் வருந்திய அமணர்கள் ஒன்று கூடி ஆலோசித்து இவனைத் தர்க்க வாதத்தால் வெல்ல முடியாது. அனல் வாத புனல்வாதங்களில் வெல்லலாம் என்று முடிவுகட்டினார்கள். அரசனிடம் தெரிவித்தார்கள். அரசனும் பிள்ளையார் அநுமதிபெற்று அவை முன்னர் அழலமைக்க ஆணையிட்டான். பிள்ளையார்

திருப்பதிக ஏட்டை 'எங்கள் நாதனே பரம்பொருள்' என்று தொழுது அவிழ்த்துப் பிரித்தார். **"போகமார்த்த பூண் முலையாள்"** என்ற திருப்பதிகம் வந்தது. 'தளிரிள வளரொளி' என்னும் பதிகத்தை பாடித் தீயிலிட்டார். ஏடு, அட்டமூர்த்தியைப்பொருளென உடைமையால் அமர்ந்து, பட்டதீயிடைப் பச்சையாய் விளங்கியது. அமணர் ஏடு வெந்து சாம்பலரகியது. அரசன் அமணரைப் பார்த்து "நீங்கள் தோற்றுவிட்டீர்கள் எம்மைவிட்டு அகலும்' என்றான். அவர்கள் மற்றொரு முறையும் கருணை காட்டவேண்டும். புனல் வாதம் செய்து பார்க்க வேண்டும் அதிலும் தோற்றுப் போனால் இவ் வேந்தன் கழுவேற்றுவான் என்று வாய் சோர்ந்து கூறினார்கள். அரசன் சம்மதிக்க அவர்கள் அத்தி நாத்தி என்றெழுதி வையை யாற்றி விட்டார்கள். அவ்வேடு கடலையடைந்தது. பிள்ளையார் **'வாழ்க அந்தணர்'** என்னும் திருப்பாசுரத்தை அருளிச் செய்து ஏட்டில் எழுதி வையையில் இட்டனர். ஏடு எதிரேறிச் சென்றது. சமணர்கள் தோற்றார்கள். கூன்பாண்டியன் நின்றசீர் நெடுமாறனாயினான். சைவம் தழைத்தது. சிவம் பெருகிற்று. ஆக, மதுரைத் தலமானது சைவத்தின் தனிப் பெருமையைக் காட்டிய தலமாகும்.

உ
சிவமயம்

# மூர்த்திநாயனாரும் - மதுரையும்

வணிகர் குலத்தவதரித்தவர் மூர்த்தியார். அவர் அகப்பற்று புறப்பற்றை அறவே விடுத்தவர். சிவபெருமானது திருவடி ஒன்றையே பற்றியவர். அன்பே வடிவானவர். இறைவனுக்குச் சந்தனக் காப்பு அணிவிக்கும் பணியை இடையீடு படாமல் இயற்றிவந்தவர். அக்காலத்து வடுகனாகிய கருநாட மன்னன் நாட்டைப் பிடித்து ஆண்டான். சமணர் பக்கஞ் சார்ந்து அரனடியார்க்கு அல்லல் ஆற்றினான். இவர் தொண்டுக்கு இடையீடு ஏற்பட்டது.

அதனால் மூர்த்தியார் மிகவருந்தி எங்கும் தேடிச் சந்தனக்கட்டை கிடைக்காமையினாலே மனம் ஒய்ந்து கோயிலையடைந்தார். சந்தனக்கட்டை கிடைக்காவிட்டாலும் சந்தனக் கட்டையைத் தேய்த்த கைகிடையாமற்போகாது என்றெண்ணிச் சந்தனக்கல்லில் கையை வைத்துத் தேய்த்தார். எலும்பு வரையில் தேய்ந்தது. கல்லின் நாற்புறமும் இரத்தம் வழிந்தோடியது. இறைவன் இதைக் கண்டு பொறுக்கவில்லை. கனவிடை எழுந்தருளி 'அன்ப! அன்பின் துணிவால் செய்யாதே. உனக்குத் துன்பம் விளைவித்தவன் அரசாட்சியெல்லாம் நீயேயடைந்து உன் பணியை விடாமற் செய்து பின்பு நம் உலகத்தையடைக' என்று அருளிச்

செய்தார். அந்நாள் இரவிலேயே வடுக அரசனுடைய வாழ்வு முடிந்தது. பொழுதும் புலர்ந்தது. நாட்டுக்கு அரசன் இல்லாத குறையை அறிந்த அமைச்சர்கள் யானையின் கையில் பூமாலையொன்றைக் கொடுத்து கண்ணைக்கட்டி விட்டார்கள். யானை விரைந்தோடிவந்து கோயிலின் வாயிலில் நின்றுகொண்டிருந்த மூர்த்தியாரைத் தனது பிடரியில் தாங்கிச்சென்று அரண்மனையை அடைந்தது. அமைச்சர்கள் ஓடிவந்து அழைத்துச் சென்று அபிஷேகம் செய்து 'இந்த அவனியைத் தாங்கவேண்டும்' என்று வேண்டிக்கொண்டார்கள். மூர்த்தியார்,

"வையம் முறைசெய் குவனாகில் வயங்கு நீறே
செய்யும் அபிடே கமுமாக செழுங்க லன்கள்
ஐயன் அடையா ளமுமாக அணிந்து தாங்கும்
மொய்புன் சடைமா முடியேமுடி யாவது"

என்றார். மந்திரியாரும் அவ்வாறே செய்ய, அரசு ஏற்று உலகெங்கும் நிரம்பிய சைவம் உயர்ந்து மன்னத் திருநீறு, கண்டிகை, சடைமுடியாகிய மும்மையினால் உலகினை ஆண்டார். இறைவன் பணியை இடையீடின்றியே செய்துவந்தார். இறைவன் ஆணையின்படி திருவடிநீழலை யடைந்தார்.

உ
சிவமயம்

# குருஞானசம்பந்தரும்-மதுரையும்

ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்த இவர்கள், கற்பன கற்று, திருவருள் வழிகாட்டத் தாய் தந்தையாருடன், அங்கயற்கண்ணியையும், அருள்நிறைந்த சொக்கரையும் வழிபட மதுரையை அடைந்தார்கள். காந்தங்கண்ட இரும்புபோல் கருணைவெள்ளம் இவர்களை அம்மையின் திருமுன்பு அழைத்துச்சென்றது. அம்மையினுடைய, அருள்நோக்கு முழுவதும் இவர்கள்மீது பரவ, தாயின் மடியிலே வளரும் சேயைப்போலத் தன்னைமறந்து, சந்நிதியில் நின்றுவிட்டார்கள். அம்மைமாட்டெழுந்த அன்புவெள்ளம், அகத்தில் அடங்காது கண்ணின்வழியாகக் கரைபுரண்டு ஓடியது. நெடுநேரம் ஆனந்தவெள்ளத்தில் அழுந்தி இருந்த இவர்களுக்குத் தாய்வழிவிடத் தந்தையைக் காண வேண்டுமென்ற பெருவிருப்புண்டாயிற்று. சொக்கலிங்கப்பெருமான் திருமுன்பு சென்றார்கள். அங்கும், முற்கூறியதேபோன்றநிலையுண்டாயிற்று. உடன்வந்த தாய்தந்தையர்கள் அவருக்குண்டான அன்புப் பெருக்கைக் கண்டு வியந்துநின்றார்கள். பரிபக்குவவிசேடத்தைக்கண்டு பயமும் மனத்துட்கொண்டார்கள். தம்மிற்றம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிதாகலின், பெருமகிழ்ச்சியும் அடைந்தார்கள். சோமசுந்தர

மூர்த்தியை வழிபட்டு விரைந்து ஊர்திரும்பவேண்டு மென்று வந்த அவர்களுக்கு, இவர்கள்நிலே, இரண்டு மூன்று நாட்கள் தாமதிக்கச்செய்தது. பொறுத் திருந்தும், தம்முடைய அருமைப் புதல்வர்க்கு வீடு திரும்பவேண்டும் என்ற எண்ணம் தானுக எழாமை யால், "ஊருக்கு வரவேண்டும்" என்று அறிவித்துக் கொண்டார்கள். ஞானசம்பந்தப்பெருமான், முறுகி வளர்ந்த கடவுட்பத்தியினுல், உடற்பற்றும், உடலேத்தந்த உற்ருர் உறவினர் பற்றும் அறப்பெற்ருராகலின் "நீவிர் எம் உடல் தந்தையரே; உயிர்த் தந்தையாகிய சொக்கலிங்கப் பெருமானும், தாயாகிய மீனும்பிகையும் இங்கிருக்க, ஊருக்கு வந்து ஆவதென்? நீங்கள் போகலாம்; உங்களோடு உறவு எமக்கு ஒருசிறிதும் இல்லே" என்று கூறி, உடற்றந்தையரை ஊருக்குப்போக உத்தரவிட்டார்கள். தாய்தந்தையர்கள், தம் மகன் பிரிவுக்குச் சிறிது வருந்திஞலும், சிவனருளேப் பெற்ற குருஞான சம்பந்தருடைய அன்புவழி நிறைந்த அருட்பெருக் கத்திற்கு அளவிலா மகிழ்ச்சிகொண்டு தம் ஊரை அடைந்தார்கள்.

பிறைமதிபோல, குருஞான சம்பந்தருக்குச் சிவாநுபவம் வளர்ந்துகொண்டே வந்தது. தண்டமிழ்ச் சொக்கருடைய திருவருள், மிகமிகப் பதியத் தலேப்பட்டது. அதஞல், பெருமான் திருமுன்பும் அம்மை திருமுன்பும், அப்படியே நின்றுவிடுவார். அகங் குழைவார். கண்ணீர் வார, நாத் தழுதழுக்க,

உரை குழற, உடல் பதற, உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை அமுதமயமாக ஆனந்தத்துள் அழுந்தி இருப்பார். இவ்வநுபவமே சொக்கநாத வெண்பாவாகத் தோன்றியது.

இன்னணம் இறையன்பில் மிக ஈடுபட்டிருந்த இவர்கள் சிந்தையைப் பொற்றாமரைக் கரையில் பூசை பண்ணுகின்ற சிவனடியார் நிலை கவர்ந்தது. தாமும் இவ்வாறு பூசை செய்து, இணையிலா இன்பத்தை எய்துவது எந்நாளோ என்று எண்ணி வந்தார். வேண்டத்தக்க தறியும் விண்ணவர் பெருமான், வேண்ட முழுதும் தருவோர் ஆதலின், ஒரு நாள் அவர் கனவில் தோன்றி, "யாம் பொற்றாமரைத் தீர்த்தத்தில் ஈசான மூலையில் இருக்கின்றோம். எடுத்துப் பூசித்து இணையிலாப் பேரின்பத்தை எய்துக" என்று ஆணையிட்டு மறைந்தார். கடவுள் கருணையைப்பெற்ற இவருள்ளம், களிப்பால் துள்ளியது. தூக்கம் வரவேயில்லை. விடியும் நேரத்தை, ஒவ்வொரு கணமும் ஒரு யுகமாகக் கழித்தார்கள். பொழுதும் புலர்ந்தது. குறித்தபடி பொற்றாமரையில் நீராடி, குறித்த இடத்தில் பார்த்தார். இவர்களுடைய திருக்கரத்தில், சொக்கலிங்கப் பெருமான் தாமே எழுந்தருளினார். பெறுதலைப் பெற்ற பெரும்பேற்றால் ஆனந்தக் கூத்தாடினார். இறைவன் கருணை இருந்தபடி என்னே என்று வியந்து, சொக்கலிங்கப்பெருமான் திருமுன்பு சென்றார். "பெருமானே! அடியேன் வேண்டியவாறு

கரத்தினிடமாக எழுந்தருளிவந்து கருணையைப் போலவே, பூசிக்கும் முறையை அறிவிக்கும் ஆசாரியனையும் தெரிவித்தருள வேண்டும்'' என வேண்டிக் கொண்டார். பெருமான் மறுநாள் இரவும் கனவிற் றோன்றி, ''திருவாரூரில், அவிச்சின்னமான உபதேச பரம்பரையில் அவதரித்திருக்கும் கமலை ஞானப்பிரகாசரிடம் சென்று உபதேசம் பெறுக'' என்று ஆணையிட்டு மறைந்தருளினார். அவ்வாறே இவர்களும் கமலையிற்சென்று உபதேசம் கேட்டுத் **தருமையிற்புக்குப் பரமாசாரிய மூர்த்திகளாய் விளங்கிவருகிறார்கள்.**

இவர்களே தருமை ஆதீனத்து ஆதி குரு மூர்த்திகள். இவர்களுடைய அனுபூதிச் செல்வமும், செந்தமிழ்ச் சொக்கருடைய திருவருட் செல்வமும் ஒன்றுகூடி, இடம் பொருள் ஏவல் எல்லாம் பெற்று, தருமையாதீனம், அவிச்சின்ன பரம்பரையாய், இருபத்தைந்து தலைமுறையாக, இடையீடின்றி இன்னருள் பெருகி, இனிது நடைபெற்றுவருகிறது.

1. குருஞானசம்பந்த தேசிகர்
2. ஆனந்தபரவச தேசிகர்
3. சச்சிதானந்த தேசிகர்
4. மாசிலாமணி தேசிகர்
5. ஞானசம்பந்த தேசிகர்
6. திருஞானசம்பந்த தேசிகர்
7. திருவம்பல தேசிகர்

8. அழகியதிருச்சிற்றம்பல தேசிகர்
9. திருநாவுக்கரசு தேசிகர்
10. சிவஞான தேசிகர்
11. சச்சிதானந்த தேசிகர்
12. முத்துக்குமார தேசிகர்
13. ஞானசம்பந்த தேசிகர்
14. கந்தப்ப தேசிகர்
15. மாசிலாமணி தேசிகர்
16. சச்சிதானந்த தேசிகர்
17. மாணிக்கவாசக தேசிகர்
18. சிவஞான தேசிகர்
19. மாணிக்கவாசக தேசிகர்
20. சிவஞான தேசிகர்
21. சச்சிதானந்த தேசிகர்
22. மாணிக்கவாசக தேசிகர்
23. சுப்பிரமணிய தேசிகர்
24. சண்முக தேசிகர்

*இருபத்தைந்தாவது குருமூர்த்திகளாக எழுந்தருளி அருட்செங்கோல் ஆட்சி செலுத்துபவர்கள்,* ***ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்*** *ஆவார்கள்.*


THE TANJORE MAHARA... SARASWATHI MAHAL LIBRARY · TANJORE

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

௨௫-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்

# குமரகுருபரரும் - மதுரையும்

ஸ்ரீவைகுண்டத்தில், சண்முகசிகாமணிக் கவிராயரின் தவக்குழந்தையாகத் தோன்றிய அடிகளார், ஐந்து வயதுவரை ஊமையாயிருந்து, பின் செந்தில் மேவிய கந்தன் அருளால் ஊமை நீங்கப் பெற்றூர்கள். எல்லாவற்றையும் ஓதாமே உணர்ந்தார்கள். உள்ளத்துறவு பூண்டு, இறைவன் எழுந்தருளி உள்ள எல்லாத் தலங்களையும் தரிசிக்க வேண்டுமென்ற விருப்பங்கொண்டார்கள். இல்லைத் துறந்து வருகிற அவர்கள், சமட்டிவிச்சாபுரமாகிய-துவாதசாந்தத் திருத்தலமாகிய—மதுரையம்பதியை அடைந்தார்கள். கண்ணுதல் கருணை வெள்ளத்து அழுந்தினர்கள். அங்கயற்கண்ணியின் அருளமுதத்தை வாரி உண்டார்கள். அதனுல், முந்துறக் கந்தனைப்பாடிய திருவாயிலிருந்து, **மீனும்பிகையைப்பற்றிய பிள்ளைத்தமிழ்** பிறந்தது. பிள்ளைத் தமிழிலே, சுவாமிகள் அம்மையின் அருள்வெள்ளத்திலே தோய்ந்து தோய்ந்து, கருணை அமுதத்தைக் கடைந்து கடைந்து, அநுபவ நவநீதத்தை அள்ளி வழங்குகிருர்கள்.

இத்தகைய பழுத்த இனிய தமிழ், காலங்கடந்த நரையா—முதிராக் கிழவனுடைய, மனைவியாகிய

அகிலமெலாமீன்ற அன்னைக் கிழத்தியின் அகத்தையும் பிணித்துவிட்டது. "இவ்வன்பர், பண்டைப் பழப்பொருட்கும் பழம்பொருளாகிய நம்மை இளம்பிள்ளையாக வைத்து ஏத்தினர், அவர் காட்சி, மெய்க்காட்சியாகவேண்டும்' என்ற அருள்நோக்கம் கொண்டு, பாலையாய், பிள்ளைத்தமிழ் அரங்கேறும் அவைக்களத்திலே வந்து அரசன் மடிமீதிருந்து, தமிழ் முழுதுங் கேட்டு, 'தொடக்குங் கடவுட் பழம் பாடல் தொடையின் பயனே!' என்று தம்மை விளித்தவுடன் பாடற்பயனாக, தம்முடைய கழுத்தில் இருந்த முத்தாரத்தைக் கழற்றி, சுவாமிகளுக்கு அணிவித்துவிட்டு மறைந்தருளினர். அரசனை திருமலைநாயக்கன், நடந்ததை அறிந்து நாயகியின் நல்லருளை வியந்தான். சுவாமிகளைத் தம்முடைய உயிர்த் துணையாக—உசாத் துணையாக—நாடாட்சிக் கேற்ற நல்லறிவுத் துணையாக, ஆக்கிக்கொண்டான். சிவிகை முதலியன கொடுத்துச் சிறப்புப் பல செய்தான். சுவாமிகளும் அங்கேயே எழுந்தருளி இருந்து மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம் முதலிய, நூல்களை அருளிச்செய்தார்கள்.

இக்குமரகுருபர சுவாமிகளே, தருமை யாதீனத்து, நான்காவது குருமூர்த்திகளாக வீற்றிருந்தருளிய ஸ்ரீ-ல-ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த சுவாமிகளிடத்தில், அநுபவப் பொருளை அறிந்து, அருள்நூல்கள் பலவற்றையும் ஆக்கினர்கள். புறப்புறச் சமயத்தாரைத் தம் அறிவு விளக்கத்

தாலும், அருட் பெருக்கத்தாலும் பிணித்து, பெரும் பொருள் திரட்டினார்கள். அறநிலையங்கள் பலவற்றை ஆக்கினார்கள். காசி முதல் இராமேச்சுரம் வரையில் பசு புண்ணியமும், பதி புண்ணியமும் இடைவிடாது நடைபெற ஏற்பாடு செய்வித்தார்கள். அவருடைய அறநிலையமே, இருபது தலைமுறையாக — திருப்பனந்தாட் காசி மடமாகத் திகழ்ந்து வருகிறது. இப்போது இருபதாவது பட்டத்திருந்து, அறப்பணிகளையாற்றி வருகின்றவர்கள், **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசி வாசி, அருணந்தித் தம்பிரான் சுவாமிகள்** ஆவார்கள்.

# ஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்

காழிக்கண்ணுதல் கருணை வெள்ளத்திடைத் தோய்ந்து, அம்மையார் அருளமுதம் ஊட்ட உண்டு, தெய்வத் தமிழைத் தேக்கெறிந்து திருவாய் மலர்ந் தருளிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாண்டிய நாட்டையும் பாண்டியனையும் உய்விக்கவேண்டி, ஆலவாயரன் முன்னிற்க எழுந்தருளிய காலத்து அமைச்சர் குலச்சிறையாரும் அரசி மங்கையர்க் கரசியாரும் ஆளுடைய பிள்ளையார் பரிவாரங் களுடன் எழுந்தருளக் குறிப்பித்த திருமடமே **ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன மடாலய மாகும்.** நாடு புறப் புறச் சமயத்திலே சென்று வேதவேள்விகளை நிந்தனை செய்துழல்கின்றதொரு காலத்தே சைவத்தைக் காப்பாற்றிய (பரப்பிய) **சிவஞானப்பாசறை** இவ்வாதீனம் என்றால் இதன் மகிமை எவ்வளவு சிறந்தது? ஞானசம்பந்தப் பிள்ளை அவதரித்திராவிட்டால் நீறெங்கே! மணி யெங்கே? சைவந்தானெங்கே?

ஞானசம்பந்தப் பெருமான் எழுந்தருளியிருந்த காலத்து, சமணர்களால் இம்மடத்தில் தீ வைக்கப் பட்டது. அதன் வெம்மையை, நமது பரமாசரியர் ஞாசம்பந்தப் பிள்ளையார், கருணைநிறைந்த உள்ளத் தோடு, "பையவே சென்று பாண்டியர்க்காகவே"

என்றார் எனின் இம்மடத்தின் பெருமை எத்துணை மேலானது. பரமாசாரிய சுவாமிகட்கு அமைய வேண்டிய ஒறுத்தலும் பொறுத்தலுமாகிய இந்த இரண்டையும், ஞானசம்பந்தப் பிள்ளையாருடைய வாய்மொழி பெற்ற இத்திருமடம் காட்டியிருக்கின்றது. இம்மடத்தில் ஞானசம்பந்தப்பிள்ளையார் காலம் முதல் இன்றுவரை இருநூற்றுத் தொண்ணூறு மஹாசன்னிதானங்கள் எழுந்தருளிச் சமயப் பேரரண் செய்து வருகின்றனர். இப்பொழுது எழுந்தருளியிருப்பவர்கள் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிநாத திருஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள்.**



உ
சிவமயம்

# மதுரையைப்பற்றிய நூல்கள்

நூலேணி, காலக்கோட்டையில் இரண்டாயிரம் மாடிகளுக்குமேல் ஏற உதவிசெய்து அக்காலத்திய அரும்பெருங் குறிப்புக்களை அறிவிக்கும். ஆதலால், மதுரையைப்பற்றிய இலக்கியங்கள் எவை எவை? யென்பது ஈண்டு, தொகுத்து நோக்கற் குரியது. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்ருகிய **சிலப்பதி காரம்** மதுரைக் காண்டம் முழுவதும், அரசுகட்டி லிற் றுஞ்சிய நெடுஞ்செழியன் காலத்து இருந்த மதுரையின் அமைப்பு, அழகு, மக்கள் நாகரீகம், பண்பாடு, ஆட்சிமுறை, மாதராடவர் ஒழுக்கம் முதலியவற்றை அறிவிக்கின்றது.

பரிபாடலிலே கோவைப்படாத சில உறுப்புக் களும், வையையைக் கூறுமிடத்துக் காணப்பெறும் சிலபகுதிகளும் மதுரையினியல்பை அறிவிக்கின் றன. ஏனைய சங்கஇலக்கியங்களில் மதுரைக் காஞ்சி ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் காலத்து மதுரையினியல்பை மாண்புற விளக்குவது. சிறு பாணற்றுப்படை, திருமுருகாற்றுப்படை, கலித் தொகை, அகம், புறம் முதலியனவும் அவ்வவ் விடங்களில் சில சிறந்த குறிப்புக்களைத் தெரிவிக் கின்றன.

இன்னும் புராணமும் சிற்றிலக்கியங்களுமாக மதுரையைப் பற்றிப் பல உள்ளன. அவற்றுள்:—

**திருவாலவாயுடையார் திருவிளையாடல்:**— இது செல்லிநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பவரால் எழுதப்பெற்றது. ஆயிரத்து எழுநூற்று ஐம்பத்து மூன்று செய்யுள்களை யுடையது. இது வேம்பத்தூரார் திருவிளையாடல் எனவும் வழங்கும். இது ஒரு மொழிபெயர்ப்புநூல். இதன் முதனூல் உத்தரமகா புராணத்தின் ஒரு பகுதியாகிய சார சமுச்சயம் என்பது. இந்நூலின் கவிப்போக்கு, பெரும்பாலும் சங்கநூற் செய்யுட்களைத் தழுவியது. திருவிளையாடல் முறைவைப்பில் இதற்கும் ஏனைய புராணங்கட்கும் மிகுதியும் வேறுபாடுண்டு.

**கடம்பவன புராணம்:**— இது வீமநாதபண்டிதரால் இயற்றப்பட்டது. ஆயிரத்துத் தொண்ணூறு பாடல்களையுடையது. அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் தொகுத்து ஒரேபடலத்திற் கூறுகிறது. இதன் முதனூல் கதம்பவன புராணம் என்னும் வடநூல். இது சிதம்பரம் வாமதேவ முருகபட்டாரகரால் அச்சிடப்பெற்றுள்ளது.

**சுந்தரபாண்டியம்:**— இது வாயிற்பதி அநதாரி என்பவரால் இயற்றப்பெற்றது. இவர் 1563-ல் இருந்தவர்.

**திருவிளையாடற்புராணம் :—** இது வேதாரண்யம் சைவாசாரியர் மரபிலுதித்த பரஞ்சோதி முனிவர் என்பவரால் இயற்றப்பெற்றது. இதன் முதனூல் ஹாலாசியமகாத்மியம். 3363செய்யுட்களையுடையது. அன்புச்சுவை சொட்டச் சொட்ட ஆக்கப்பட்டது. இதன் கவிப்போக்கு, தெள்ளிய ஆழ்ந்த கருத்துக்களால் தெய்வ அன்பு சிறக்க அமைந்துள்ளது.

**மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி :—** இதுவும் பரஞ்சோதிமுனிவரால் இயற்றப் பெற்றது. இது அந்தாதித் தொடையால் பத்துப் பத்துப்பாட்டாக வெவ்வேறு சந்த அமைப்புடன் பாடப்பெற்றது. 'திருவிளையாடல்போற்றிக் கலிவெண்பா' என்பதும் இவர் இயற்றியதே.

**கல்லாடம் :—** கல்லாடரால் இயற்றப்பெற்றது. தில்லைக்குத் திருக்கோவையார் அமைந்ததுபோலத் திரு ஆலவாய்க்கு ஆக்கப்பெற்ற கோவைத் துறை யானமைந்த 100 அகவற்பாக்களை யுடையது. உவமை நலமும் சொல்லமைதியும் பொருட்சிறப்பும் உடையது. இதனைப்பற்றிக் 'கல்லாடம் படித்தவருடன் மல்லாடாதே' என்ற பழமொழி வழங்கி வருகிறது. சங்ககாலத்துக் கல்லாடரும் இவரும் ஒருவரா வேறா என்பது அறிவுலகத்து ஆராய்ச்சியில் இருக்கிறது.

**திருவிளையாடற்பயகரமாலை :—** திருவிளையாடல் வரலாற்றையொட்டி எழுந்த ஒருசிறுநூல். இதற்குப்

பழய உரை ஒன்று உண்டு. அது இன்னும் அச்சாக வில்லை.

**சொக்கநாதவெண்பா; சொக்கநாதக்கலித்துறை:** இவ்விரண்டும் தருமையாதீனத்து ஆதி குருமூர்த்தி களாகிய குருஞானசம்பந்தரால் இயற்றப்பெற்றன. அவர்களுடைய சிவாநுபவ முதிர்ச்சி செஞ்சொற் கவியின்பத்தால் தெளிவாகப் புலப்படுத்தப்பெற் றுள்ளது. சொக்கநாதவெண்பா 94 பாடல்களை யுடையது. சொக்கநாதக் கலித்துறை 11 பாடல் களையுடையது.

**மதுரைக்கோவை:—** இது நிம்பைச் சங்கர நாராயணரால் இயற்றப்பெற்றது. ஊர் வேம்பத்தூர். இவருடைய காலம் முதலியன நன்றாகத் தெரிய வில்லை.

**மதுரை மும்மணிக்கோவை:—** இது பலபட் டடைச் சொக்கநாதபிள்ளை என்பவரால் இயற்றப் பெற்றது. இவர் 200 ஆண்டுகட்குமுன் மதுரையில் இருந்தவர். இவருடைய தந்தையார் சொக்கநாதக் கவிராயர். இந்நூல் அகவல் வெண்பா கலித்துறை என்ற முறையான் முப்பதுபாடல்கொண்டது. விநய மும் பொருளாழமும் உடையவாக்கு. பழமொழிகள் மிகவும் கையாளப்பட்டுள்ளன.

**மதுரைச் சொக்கநாதர் உலா:—** இது புராணத் திருமலைநாதர் என்பவரால் இயற்றப்பெற்றது. இந் நூலாசிரியர் காஞ்சிபுரம் ஞானப்பிரகாச மடத்துச்

சிஷ்ய பரம்பரையைச் சார்ந்தவர். காலம் கி. பி. 1526 என்று தெரிகிறது.

**மதுரைக்கலம்பகம், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை :—** இவைகள் திருத்தருமபுர ஆதீனத்து நான்காவது மகாசன்னிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெற்ற குமரகுருபர சுவாமிகளால் இயற்றப்பெற்றவை. சுவாமிகள் இளமைப் பருவத்து மதுரைக்கு வழிபடவந்த காலத்து, அம்மையின் அருட் பெருக்கால், பிள்ளைத்தமிழைப் பாடினார்கள். இவர்களுடைய தமிழ்வளம் தண் பொருநை ஒழுக்கைப்போலத் தடையின்றிச் செல்வது. இரட்டை மணிமாலையும், குறமும் இவர்கள் இயற்றியன அல்ல என்று கூறுவாருமுளர்.

**பாண்டிமண்டல சதகம் :—** இது பாண்டி மண்டலத்து வரலாறு முழுவதையும் அறிவிப்பது. மதுரை ஐயன்பெருமாள் என்பவரால் ஆக்கப் பெற்றது. 100 பாடல்களை உடையது.

**மதுரைத் திருப்பணிமாலை :—** இது மதுரைத் திருக்கோயில், கோபுரம், மண்டபம் முதலியவற்றை இன்ன இன்னார் இன்ன இன்ன காலத்துத் திருப் பணி செய்தனர் என்று அறிவிக்கின்றது. பெரும் பாலும் நாயக்கர் காலத்து அரசாட்சி முறைகளையே அறிவிக்கின்றது.






ஸ்ரீ ஞானியம்மை மயிலுக்குச்

சாயல் கற்பித்தது




மீனாக்ஷியம்மை மானுக்குப் பார்வை கற்பித்தது



மீனாக்ஷியம்மை அன்னத்திற்கு நடைகற்பித்தது.

இன்னும் பிற்காலத்துச்சிற்றிலக்கியங்களாகத் திகழ்வன பலஉள. சிவராசதானி என்னும் தமிழ்த் தலைநகரமாகிய மதுரை, எந்தக்காலத்தும், எல்லாப் புலவர்களாலும் பாடப்படுவது ஒன்றேயாம்.

ஒரு புலவர் அங்கயற்கண்ணியை அடிவணங்கினேன்; ஆதலால் எமன் வந்தால் ஊருக்கு அனுப்பிவிடுவேன் என்கிறார்.

“ வண்டிட்ட கூந்தலும் வாரிட்ட கொங்கை வரைகளுங்கற்
கண்டிட்ட சொல்லும் கயற்கண்ணி பாகமுங் கைதொழுதேன்
தண்டிட் டடிக்கு மறலிவந்தாற் சள்ளையிட்டு நகைத்து
உண்டிட்டு வாசிறு பிள்ளாயென்று ஊருக்க னுப்புவனே ”

என்பது அப்பாடல். சொக்கேசப்பெருமானைப் பார்த்து அவரே,

‘ துடியார்கரத்து மதுரேசரே யும்மைத் துள்ளியசேர்
கொடியானடித்ததுங் குற்றமன்றே கிழக்கோதையிவள்
அடியாளென் றேசுட்ட பிட்டையெல் லாமள்ளி யள்ளித்தின்று
வடியா நதியிற் கரைத்துவிட் டீரவள் வல்வினையே ”

என்று நகைச்சுவைபடக் கூறுகிறார். இத்தகைய தனிப்பாடல்கள் பல உள்ளன.

சிற்பங்கள் இதன்கண் விளங்குகின்றன. அவற்றுள் தடாதகைப் பிராட்டியார் திருமணக்காட்சியறிவிக்கும் திருவுருவம் மிக மேலானது. அதுபோலவே மண்டபத்தின் கீழ்பாகமாக காளி, வீரபத்திரர், சிவபெருமான் மூவர் திருவுருவங்களும் அமைந்துள்ளன.

சொக்கலிங்கப்பெருமான் கோயிலுக்கருகில் கல்யாண மண்டபம் இருக்கிறது. சித்திரைமாதத்தில் திருக்கல்யாணம் நடக்கும். அதற்குச் சற்று தூரத்தில்வடகிழக்கே ஆயிரக்கால்மண்டபம் ஒன்று உண்டு. இம்மண்டபத்தில் ஒன்று குறைய ஆயிரம் கால்கள் இருக்கின்றன. இது சகம் 1494-ல் அரசாண்ட கிருஷ்ணவீரப்ப நாயக்கரது திருப்பணி என்று சொல்லுவார்கள்.

இவையன்றி வீரவசந்த ராஜமண்டபம், ஆடி வீதி நிருதிவீதி மண்டபம், தட்டுச்சுற்றி மண்டபம், சம்பந்தர் மண்டபம், அறுபத்துமூவர் மண்டபம் முதலியனவும் இருக்கின்றன.

**தீர்த்தங்கள்:—** மதுரையில் பொற்றாமரை, எழுகடல் முதலிய குளங்களும், வையை நதியும் ஆம். இவற்றுள் பொற்றாமரை, கோயிலுக்குள்ளேயே அம்பாள் சந்நிதிக்குப் பக்கத்தில் இருக்கின்றது. கடைச்சங்கத்தாரின் சங்கப்பலகை இதன் மேலதாகவே விளங்கிற்று.

**எழுகடல் :—** மதுரையின் நிருதிமூலையிலுள்ள காஞ்சனமாலை கோயிலுக்குப் பக்கத்தில் இருக்கிறது. சௌந்தரபாண்டியன் காஞ்சனமாலைக்காக வருவித்த எழுகடல்களும் இத்தடாகத்து அடங்கப் பெற்றமையின், இத்தடாகம் இப் பெயர்பெற்றது.

**வையை :—** மதுரையின் வடபால் ஓடுகிறது. இதுவும் இறைவனால் குண்டோதரனுக்குத் திருமுடிக் கங்கையிலிருந்து அளிக்கப்பெற்றது.

இவையன்றி வண்டியூர் தெப்பக்குளம், திருமலைநாயக்கர்குளம் முதலிய குளங்களும் உள்ளன.

சொக்கலிங்கப்பெருமானது கோயில் வாயிலை "முத்தளக்கும் திருவாயில்" என்று சொக்கநாதர் உலா கூறுகிறது.

சொக்கலிங்கப் பெருமானுக்கு அட்டாலைச் சேவகன், அடிமைக்கு நல்லவர், அடியார்க்கடிய சொக்கர், அடியார்க்கு நல்லான், அதிர வீசி யாடுவான், அபிஷேகச் சொக்கன், அழகன், அழகிய சொக்கன், ஆலவாய் மெய்யன், செந்தமிழ் பயிலும் சுந்தரன், செந்தமிழாகரன், சேவிக்க வாழ்விக்கும் தெய்வப்பெருமான், வையைத்துறைவன், மாணிக்க வல்லி மணாளன், பண்ணிசைச் சொக்கன், புழுகணிச் சொக்கன், வாசிவாரியன், தெய்வப்பாண்டியன், கால்மாறியாடிய கண்ணுதற் பெருமான் என்றெல்லாம் பெயர்கள் விளங்குகின்றன. அம்மைக்கு

மாணிக்கவல்லி, அபிஷேகவல்லி, அங்கயற் கண்ணம்மை, தடாதகைப்பிராட்டி, தமிழறியும் பெருமாட்டி என்றெல்லாம் பலநாமங்கள் வழங்குகின்றன.

**தலப்பெயர்கள்** :— மதுரை விராட்புருடனுக்கு சிரஸ்தானமாகிய பிரமரந்திரத்திற்கு மேல் பன்னிரண்டு விரல் அளவில் இருப்பதால் **துவாதசாந்தபுரம்** எனவும், தடாதகைப்பிராட்டி கன்னியாயிருந்து அரசாண்டமையால் **கன்னிபுரீசம்** என்றும், ஜீவன் முத்தர் வாழ்வதால் **ஜீவன்முத்திபுரம்** என்றும், வரகுணனுக்குச் சிவலோகங் காட்டியதால் **சிவலோகம்** என்றும், கடப்பங்காடாயிருந்தமையான் **கடம்பவனம்** என்றும், சிவபெருமான் சௌந்தரபாண்டியனும் அம்மை தடாதகையாரும் முருகவேள் உக்கிர குமாரனுகியும் அரசுவீற்றிருந்தமையால் **சிவநகரம்** என்றும், சிவபெருமானது கங்கணமாயிருந்த பாம்பு வட்டமாய் வாலை வாயாற் கவ்வி எல்லை காட்டியவதனல் **ஆலவாய்** என்றும், இறைவன் திருமுடிக் கண்ணுள்ள சந்திரனிடத்ததாய அமுதத்தை எடுத்துத் தெளித்துச் சாந்தி செய்தமையான் **மதுரை** என்றும், கன்னி கரியமால் காளி ஆலவாய் என்ற நான்கும் கூடியதால் நான்மாடக் **கூடல்** என்றும், ஆன்மாக்களுக்கு ஞானத்தில் சரியை முதலிய நான்கையும் தருதலின் **சமஷ்டிவிச்சாபுரம்** என்றும் பெயர் பெறும்.

# வரலாற்றுத் தொடர்புள்ள ஊர்கள்

**ஆளுடையார்கோயில் :—** இது வாதவூரடிகளை ஆட்கொண்ட இடம்.

**இருஞ்சிறை :-** பாண்டிராசன் உக்கிரகுமாரன் மேகங்களைச் சிறைபிடித்த இடம். மானமதுரைக்குப் பக்கத்தில் உள்ளது.

**கட்டுநல்லூர் :—** பாண்டியன் மேகங்களைப் பிடித்துக் கட்டிய இடம். இது இருஞ்சிறைக்குப் பக்கத்தில் இருக்கிறது.

**கழுவேறுமடை :-** சமணர்கள்கழுவேறிய இடம்.

**மேலைக்கால் :—** இது கழுக்களின் வரிசை முடிந்த மேலைக்கோடி என்று பொருள்படும். இவ்விரண்டு ஊர்களும் திருப்பூவணத்தின் பக்கத்தில் உள்ளது.

**காவணநல்லூர் :—** குண்டோதரன் எல்லாக் குளத்து நீரையும் உண்டுவிடச் சொக்கலிங்கப் பெருமான் தண்ணீர்க்கஷ்டம் நீங்குவதற்காக உண்டாக்கிய நீர்நிலைகளுள் ஒன்று. இது பந்தர் சூழ உள்ளமையால் இப்பெயர்பெற்றது.

**தனிச்சயம் :—** மதுரைக்கு மேற்கேயுள்ளது. பாண்டியன் இந்திரனைத் தனித்துநின்று செயித்த

இடம். இக்காலத்து ஐயங்கோட்டைத் தனிச்சயம் என வழங்கும்.

**திருவேடகம்:—** இது மதுரைக்கு மேல்பால் வையைக்கரையிலுள்ளது. இது திருஞானசம்பந்தப் பெருமான் இட்ட புனல்வாத ஏடு எதிரேறிச் சென்று தங்கிய இடம்.

**நரிக்குடி:—** சொக்கலிங்கப்பெருமான் நரிகளைக் குதிரைகளாக்கிய இடம்.

**நாம்முன்னூர்:—** மேகத்திற்குப் பிணைகொடுக்க, வேளாளர்களுள் ஒருவன் நாம் முன்னே நாம் முன்னே என்று சொல்லிக்கொண்டுவந்த ஒரு ஊர்.

**ஓரிரவு இருக்கை:—** இடைக்காடர் பிணக்கைத் தீர்க்க, பெருமான் ஆலவாயைவிட்டு அகன்று, ஒரு நாள் இரவு தங்கியிருந்த இடம்.

**பட்டமங்கலம்:—** சோமசுந்தரக்கடவுள் அட்டமா சித்தி அருளிச்செய்த இடம். இது சிவகங்கை தாலூகாவில் உள்ளது.

**பெருங்கிராமம்:—** விருத்தகுமார பாலராகிய பெருமான் அருள்செய்த அம்மை அவதரித்த இடம்.

# பாண்டியநாட்டு அரசியல்

தமிழகத்தில் செங்கோல் செலுத்திய தமிழ் மன்னர்கள், சேர சோழ பாண்டியர்கள். இவர்கள் படைப்புக்காலம் தொடங்கி மேம்பட்டுவரும் பழங் குடியெனத் தெள்ளுதமிழ் வள்ளுவர்க்கு உள்ளு பேருரைவகுத்த பரிமேலழகர் பாராட்டுவர். ஒல்காப் புகழ்மைத் தொல்காப்பியனாரும் இவர்கள் ஆண்ட தமிழ் நாட்டை "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" என்றார். செந்தமிழ் வளர்த்தவரென்ற சிறப்பு பாண்டியர்க்கேயுரியது. இம் மும்முடி மன்னரும் பொருநைப்பழந்துறைமுகமாகுங் கொற் கையில் ஒருகுடியிற் பிறந்த மூவகையினர் என்றுங் குறிக்கப்பெறுவர். இவர்களில் சேரன் மேற்கும், சோழன் வடக்கும் நோக்கித் தம் நாடு அமைத்து ஆளும்முயற்சியில் ஈடுபடத் தென்னவனும் பாண்டி யனே. முன்னையதாம் பாண்டியநாட்டை நன்னயம் பெற ஆண்டு சிறக்கலானான். இப்பாண்டியன் ஆண்டநாடு இப்பொழுது மதுரை, இராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லாக்களாகும்.

பாண்டியநாட்டின் புழமைபற்றி, கிரேக்க ரோம வரலாற்று ஆசிரியர்கள் குறித்துள்ளார்கள். கி.மு. 302-ல் பாடலிபுத்திரநகரில் இருந்து அரசு புரிந்த சந்திரகுப்தன் அவையில் மகா அலெக்ஸாந்த ரின் பின் தலைவனாகவிளங்கிய செலுக்கஸ் தம் தூதராக அனுப்பிய மெகஸ்தனிஸ் என்பவர்

முதன் முதலாகப் பாண்டிய நாட்டைக் குறிப்பிடுகிறார். கி. பி. 20ல் ரோமச்சக்கிரவர்த்தி அகஸ்டஸுக்கு, பாண்டியர் தூதரொருவரை அனுப்பினரென்று ஸ்டிராபோ குறிப்பிடுகிறார். கி. பி. 140ல் பாண்டியன் தலைநகர் மதுரையென்று **தாலமி** குறிப்பிடுகிறார். மதுரையிலும் மதுரைச்சூழலிலும் ரோமன் நாணயங்கள் அகப்பட்டமைகொண்டு ரோமர் குடியிருக்கையும் அங்கு அமைந்திருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. கி. மு. 269ல் அரியணையேறிய அசோகப்பெருமன்னர் தம் புதிய புத்தமதக் கொள்கையைத் தென் குமரிவரைப் பரவச்செய்வதற்குச் சோழ, பாண்டிய மன்னரும் துணைபுரியும் பான்மையராயினர்.

1800 ஆண்டுகளுக்கு முந்திய தமிழர் என்ற நூலாசிரியர் திரு. **வி. கனகசபைப் பிள்ளை** பழந் தமிழிலக்கியங்களாகிய புறநானூறு, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை அக்காலத்திய கலை, வாணிபம், உழவு, சமூகம், அரசியனிலை இவற்றைப்பற்றிய குறிப்புக்கள் தெரிவிப்பனவன்றி வரலாற்றுக் குறிப்புக்களையுங்கொண்டுள்ளன என்கின்றார். அவர் குறிப்புக்களில் ஐவர் பாண்டியர் அறிவிக்கப்பெறுகிறார். அவர்கள் முதலாவது நெடுஞ்செழியன் (கி. பி. 50-75), வெற்றிவேற் செழியன் (75-90), 2வது நெடுஞ்செழியன் (90-128), உக்கிரப்பெருவழுதி (128-140), நன்மாறன் (140-150). இவர்களில் முதலாவது நெடுஞ்

செழியனே ஆரியப்படைவென்றவன். வினைவிளை கால முதிர்ச்சியால் தனது மனைவி பொற்சிலம்பைக் கவர்ந்த கள்வன் கோவலனெனக்கொண்டு கொல் வித்தவன்: பின் உண்மையுணர உயிர் துறந்தவன். சின்னாளாண்ட வெற்றிவேற்செழியன், பின் அர சுரிமையேற்ற இரண்டாம் நெடுஞ்செழியன் போர் வீரன். தன்னாட்டிற் படையெடுத்த சோழனைத் துரத்தி அந்நாட்டின் பகுதியைத் தன்னடாக்கிய வன். தன்னை வீழ்த்தக் கருதிச் சூழ்ச்சிபுரிந்த சோழ சேரர்களை நெடும்போரொன்றில் தோற்பித் தவன். நான்காம் வேந்தனாகிய உக்கிரப் பெரு வழுதி காலத்துப் புலவர் நாற்பத்தெண்மர் பொருந் திய தமிழ்ச்சங்கத்தில் தெய்வப்புலமைத் திருவள்ளு வனார் இயற்றிய திருக்குறளென்னுந் தமிழ்மறை அரங்கேறியதாம். இந்நூலை அம்மன்னனே,

"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்து—நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சம்
சிந்திக்க கேட்க செவி"

என்று சிறப்பிக்கும் பாவலனாயுளன். இவன் சேர சோழ மன்னனுடன் நட்புற்றவன். இவர்களில் ஒரு வராற்றிய வேள்வியிற் கலந்துகொண்டவனென்பர் ஔவையார். வேங்கைமார்பன் இரங்கக் கானப் பேரெயில் கடந்தவன். இஃது புறநானூற்றில் "புலவரை இறந்த புகழ்சால் தோன்றல்" என்ற ஐயூர் மூலங்கிழார் பாடலால் அறியப்படும்.

இந்தியத் தீபகற்பத்தின் தென்கோடியில் முதற்றமிழ்ச்சங்கம் விளங்கிய தென்மதுரையினின்றும் வேறுபடவே கவிகளால் நான்மாடக் கூடலென்று பாடப்பெறும் தற்கால மதுரை வடமதுரையென்று அழைக்கப்பெறலாயிற்று.

இப்பொழுது உள்ள மதுரை பழமதுரை எல்லையில் வேறுபட்டது. அஃது திருப்பரங்குன்றத்திற்குக் கிழக்கில் இப்பொழுது இருக்கும் எல்லைக்குத் தென்கிழக்கில் ஆறுமைலுக்கப்பாற்பட்டது. இஃது நக்கீரர் சொற்படி "பொருநர்த் தேய்த்த போரறு வாயில், திருவீற்றிருந்த தீதுதீர்நியமத்து மாடமலி மறுகினை" யுடையதென்றும், இதற்கு மேற்கில் திருப்பரங்குன்றம் உளதென்றும் விளங்கும்.

நக்கீரர் பாடிய நெடுநல்வாடையும், மாங்குடி மருதனார் பாடிய மதுரைக் காஞ்சியும், மதுரை நகரையும் அதன் குடிகளின் இயல்பையும் விளக்கமாகத் தெரிவிக்கின்றன. முடிமன்னன் மதுரையிலிருந்து ஆளுமேல் குடிமன்னனும் இளமன்னன் கொற்கையிலிருந்து ஆள்வானென்று கி. பி. 800ல் பெரிப்புளூஸ்ஸும், பின்னர் தாலமியும் குறித்துள்ளார். கல்வெட்டுக்களில் 'கொற்கையாளி' என்று குறிக்கப்பெறுவதும் கருதத்தக்கது. இந்நாட்டில் பரவியமதம் சமணம் என்பதும், அச்சமண்மத மன்னனுக விளங்கிய பாண்டியன் நெடுமாறனைச் சைவசமய குரவர் நால்வருள் ஒருவராகிய ஞானசம்பந்தப் பிள்ளையார் "கோளமணர் வீறுகெடக்

கூன்நிமிர்த்து வெப்பு ஒழித்துப் பாண்டியனை நீறு புனைவித்து நெடுமாறனுக்கினுரென்பதும்,தொண்டர் சீர்பரவுவாராகும் சேக்கிழார் அருளிய பெரியபுரா ணத்தால் விளங்கும்.

ஏழாம் நூற்றாண்டுத் தொடக்க முதலே பிந்திய பாண்டிய வரலாறு, கல்வெட்டுக்களால் விளங்கப் பெறும். காஞ்சியிலிருந்தாண்ட சிம்ஹவிஷ்ணு, அவன் பேரன் முதலாம் நரசிம்ஹவர்மன் இருவ ரும் தாங்கள் பாண்டியநாடுவரை படையெடுத்துச் சென்று வெற்றிகொண்டதாகக் கல்வெட்டுக்களிற் பொறித்துள்ளார்கள். வாதாமிச்சாளுக்கிய மன் னன் 2ம் புலிகேசி (610-34ல்) சேர சோழ பாண்டி யர்களை ஒன்றுபடுத்திப் பல்லவரைத் தென்றிசை நோக்காது துரப்பித்தானெனப்படும். பின்னெரு நூறாண்டு அமைதியுற்று ஆட்சிபுரிந்த பாண்டியரை கி. பி. 750-ல் நந்திவர்மப்பல்லவமல்லன் மண்ணைக் குடியில் தன் தளபதி உதயசந்திரனைக் கொண்டு வெற்றிபெற்றான் என்ப. இப் பல்லவமன்னராட்சி வீழ்ந்த சில நாளில், தலையெடுத்த கங்கபல்லவர் தங்கள் ஆட்சியைச் சோழதேசத்தின் வடஎல்லையில் செலுத்தினரெனப்படும். பாண்டியர்கள் தங்கள் தனியாளுகையை விட்டுக்கொடாததுடன் 9-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிவரை சோழநாட்டை அடக்கியாளுந் தன்மையில் இருந்தனர். தஞ்சை யருகில் உள்ள கல்வெட்டும், வடஆர்க்காட்டில் உள்ள கல்வெட்டும், பாண்டியர்கள் போர்புரிய

முற்பட்டு, கங்க பல்லவரின்கீழ் அடங்கிய கங்கர் என்னும் மைசூர்வமிசத்தவரைக் கும்பகோணத்தை அடுத்த திருப்புறம்பயம் என்னுமிடத்தில் வென்றார் கள் என்றும், இலங்கை மகாவமிசம் 843 முதல் 66 வரை இலங்கையை ஆண்ட முதற்சேனமன்னன் காலத்தில் இலங்கைமீது ஒரு படை எடுப்பு எடுத் துள்ளனர் என்றும் தெரிவிக்கின்றன.

இதுவரை பாம்புண்ட பரிதிபோல் ஒளிமழுங்கி அளியிழந்த சோழர் குலம், முதலாம் பராந்தகன் முதலாகத் தன் வீர வெற்றிமுரசைத் தமிழகம் எங்கும், ஈழமுள்பட முழக்குவதாயிற்று. இது குமரியடுத்த சுசீந்திர முதல், திருக்காளத்தி வரை காணப்படும் கல்வெட்டுக்களால் வெளியாம். பாண் டியர் மீண்டும் சுதந்திரம் அடையும் வழி உதவப் பட்டதுபோல், 944-ல் அரக்கோணத்தருகே மால் கெட் ராஷ்டிரகூடரால் சோழர்கள் தோல்வி யுற்றனர். ஆகவே வீரபாண்டியன் ஆதித்த கரி காலச் சோழனை வென்று, சோழர் குலாந்தகன் என்னும் பெயர் சூடினன். ஆனால், பாண்டியருக்கு இந்நிலை உறுதியாயிற்றில்லை. முதலாம் இராஜ ராஜன் (985—1013) பாண்டியருடைய பெருமைக் கும் வெற்றிக்கும் அடிப்படையானவற்றை யெல் லாம் முடிப்படக் கெடுத்தானென்பது, மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களில் காணப்படும் செப்பு நாணயங்களாலும், பாண்டியன் பழந்தலைநகர் கொற்கையின்பெயர், 'சோழேந்திரசிம்ம சதுர்வேதி

மங்கலம்' என்றும், பாண்டிய நாட்டின் பெயர் 'ராஜராஜ பாண்டிய நாடு' என்றும் மாறி அழைக்கப்பெற்ற காரணத்தாலும் விளங்கும். சோழராதிக்கம், இம்மாகாண முழுமையும் கொல்லம், கூர்க், ஒரிசா, இலங்கை எங்கும் பரவியது. மலேயா, ஆர்ச்சிபிலகோ, பர்மா முதலியனவும் பின் சந்ததியாரால் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனல், கலியாணி நகரில் மேலைச்சளுக்கியர் எழுச்சியே வடமேற்கு எல்லை வெற்றிக்குத் தடையாயிருந்தது. இராஜராஜன் முதலாம் இராஜேந்திர சோழன் (1011—33) ஆட்சியில் பாண்டியர் அடங்கியவர்களாயிருந்தனர். முதலாம் இராஜாதிராஜனது (1018—53) ஆட்சியில் பாண்டியர், சேரர், சிங்களர் மூவரும் சேர்ந்து சோழராதிக்கத்தைக் கவிழ்க்க முற்பட்டனர். ஆனல், முற்றும் தோல்வியுற்றனர். இராஜேந்திர தேவனின் காலத்தில் (1052—63) பாண்டியர் தொந்தரவு ஒன்றுமில்லை. ஆனல் முதலாம் வீரராஜேந்திரன் (1062—70) தம்முடன் கலகம் செய்ய முற்பட்ட பாண்டியமுதல்வரைப் பற்றி யானைக்காலில் இட்டுக் கொன்றனன். தன் மகன் கங்கைகொண்டசோழனிடம் நாட்டை ஒப்புவித்து, 'சோழபாண்டியன்' என்னும் மகுடத்தைத் தரிக்கச் செய்தனன். வீர ராஜேந்திரன் இறந்ததும், முடியைப் பற்றிய அடிபிடி சண்டை குடும்பத்துள் கிளம்பியது. முதலாம் குலோத்துங்க சோழன் ஆட்சியை ஏற்ற காலமாகிய 1074 வரை நீடித்தது. இடைப்பட்ட இந்நான்காண்டுகளும் தன் நாட்டுக்கு

வெளியில் இலங்கை மன்னனும் சேர பாண்டியர் களும் சேர்ந்து விளைத்த கலகங்களை அடக்கும் வகையில் கழிந்தன. முக்கிய இடங்களைக் கைப்பற் றிக் கோட்டாற்றில் படையமைத்து, பாண்டியநாட் டெல்லையும் வரையறுத்தனன்.

இங்ஙனம் சோழ பாண்டிய வமிச மன்ன ராட்சி, பாண்டியநாட் டாளுகையை 1136 வரை நடத்தி வந்தது. அடுத்த 35 ஆண்டுகட்கு, சோழர் கள் பாண்டியர்களின் வரலாற்றுக்கு விளக்க மில்லை.

இக்காலத்தில் சோழநாடு அளவிற் சுருங்கியது. பாண்டிய நாட்டில் இவர்களாட்சி எங்ஙிலை ஆயிற் றென்பது விளங்கவில்லை. இறுதியாக இரண்டாம் இராஜாதிராஜன் (1171—72) கல்வெட்டுக்கள் இரு மரபின் சம்பந்தத்தையும் சிறிது விளக்க முற்படு கின்றன. பாண்டியநாட்டரசுரிமைபற்றி பராக் கிரம பாண்டியனுக்கும், குலசேகர பாண்டியனுக் கும் ஏற்பட்ட சண்டை சச்சரவுகளை இலங்கை அரசரும், சோழ மன்னரும் தொடர்ந்து நின்று போராடிப் பலவிதத் துன்பங்களின்மேல் மூன்ரும் குலோத்துங்கசோழன் குலசேகரன் சந்ததி விக்கிரம பாண்டியர்க்குத் துணை புரிந்து, அவனை அரியணை ஏற்றுவித்தனர். சிங்களரைக் கடலுள் துரத்தி, மறவரை வென்று மதுரையை வென்று விக்கிரமனை மன்னனுக்கித் தானும் "மதுரையும் ஈழமுங் கொண்டான்" என்னும் பட்டமும்சூடினன்.

இந்நிகழ்ச்சிகள் 12-ம் நூற்றாண்டின் இறுதியில் நடந்தவை. 13-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோழர் வலிமை குன்றத் தொடங்கியது. மூன்றும் இராஜராஜன் (1216—1239) காலத்தில் அவன் கீழ்ப்பட்ட தொண்டைமண்டலச் சிற்றரசன் குழப்பஞ்செய்து அவனையும் கைப்பற்றி விடுதலை செய்ய மறுக்க, கலியாணி மேலைச் சாளுக்கியரை அடக்கி உயர்ந்த ஹொய்சள வல்லாளரால் விடுவிக்கப்பட்டனன். இங்ஙனம் சோழராதிக்கம் குறைவுற்றுத் தளர்ந்தது; பாண்டியர் எழுந்து மேம்படத் தூண்டியது. ஆசிரியர் கீல்ஆர்ன், துரைத்தனக் கல்வெட்டுகளில் கண்ட கால எல்லைக் குறிப்புகளைக் கொண்டு பின்வரு முறையால் மதுரையை ஆண்ட பாண்டியராட்சிக் காலத்தை வரையறுத்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | ஜடாவர்ம குலசேகரன் | 1190—1214 |
| 2. | மாறவர்மன் சுந்தரபாண்டியன் I | 1216—35 |
| 3. | மாறவர்மன் சுந்தரபாண்டியன் II | 1238—51 |
| 4. | ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் I | 1251—61 |
| 5. | வீரபாண்டியன் | 1252—67 |
| 6. | மாறவர்மன் குலசேகரன் I | 1268—1308 |
| 7. | ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் | 1275—90 |
| 8. | மாறவர்மன் குலசேகரன் II | 1314—21 |
| 9. | மாறவர்மன் பராக்ரமபாண்டியன் | 1334—52 |
| 10. | ஜடாவர்மன் பராக்ரமபாண்டியன் | 1357—72 |

11. ஜடிலவர்மன் பராக்ரம பாண்டிய ஆரிகேசரி தேவன் 1422—61

12. ஜடிலவர்மன் பராக்ரம பாண்டிய குலசேகரன் 1479—99

13. ஜடிலவர்மன் ஸ்ரீவல்லபன் 1534—37

14. மாறவர்மன் சுந்தரபாண்டியன் III 1531—55

15. ஜடிலவர்வன் ஸ்ரீவல்லப அதிவீர ராமன். 1562—67

1216-ல் அரசுகட்டில் ஏறிய மாறவர்மன் சுந்தர பாண்டியன் சோழநாட்டின்மீது படையெடுத்து உறையூரையும் தலைநகர் தஞ்சையையும் கைக்கொண்டான். சோழநாட்டை வென்றான் என்பதற்கு அவர் காலத்து நாணயங்களும் கல்வெட்டுக்களும் சான்றுபகரும். இப் பாண்டியர்கள் சோழ நாட்டை வென்ற ஹொய்சளருடன் உறவுபூண்டு பின் அவர்கள் ஸ்ரீரங்கத்தை எதிர்த்துச் சோழ நாட்டை நிலைநிறுத்தியவர் என்ற பெயரைக்கொண்டதும் இவர் பாண்டிநாட்டை அடைந்தனர். 1251-61-ல் ஆண்ட முதலாம் ஜடாவர்ம சுந்தர பாண்டியன் சிறந்த வெற்றி வீரன். இலங்கைமீது படை எடுத்துப், புத்தர்பல்லை கைக்கொண்டு 'இலங்கையை வென்ற இரண்டாம் இராமன்' என்ற பெயருடன் சிறந்து, ஸ்ரீரங்க விமானத்தைப் பொன்வேய்ந்து பின் ஓரங்கல் கணபதி வம்சத்து காகதீய மன்னர்களை வென்று, நெல்லூர்வரை தன் ஆளுகையை நீட்டித்து அங்கு ஒய்சால மன்னன் சோமேசனை

வென்று சிறந்த வீரனானன். 1246—1267 வரை ஆண்ட மூன்றாம் இராஜேந்திர சோழன் சோமேசுரனை மீளாவண்ணமடித்த மாளா வீரனாய் இருந்தும் ஹொய்சளர் ஸ்ரீரங்கத்தை அடுத்திருந்து 15-ம் நூற்றாண்டு வரை பாண்டியரை அவ்விடம் அணுகாதபடி செய்துவிட்டனர். 1267-ல் சோழர் ஆட்சி குன்றுதலும் ஹொய்சளரால்கைக்கொள்ளப்படாத சோழதேசம் பாண்டியரால் கைக்கொள்ளப்பட்டது. முதலாம் மாறவர்ம குலசேகரன் இரண்டாம் ஜடாவர்ம சுந்தரபாண்டியன் இவர்கள் 1268 முதல் 1308 வரை ஆண்டிருந்த பாண்டிய மன்னர்களில் வரலாற்றாசிரியர்களால் குறிக்கப்பட்ட வீரர்களாவர். முன்னவர் கலேஸ்திவா என்ற மகமதிய சரித்திராசிரியராலும், பின்னவர் செந்தர்பந்தி என்ற மார்க்க போலாவாலும் அழைக்கப்பெற்றுள்ளார். பின் வந்த சீன சிங்கள சரித்திர குறிப்பாளர்களும் 13,14-ம் நூற்றாண்டுகளில் பாண்டிநாட்டரசர் அடைந்த வெற்றி புகழ் இவைகளை விரிவாக எடுத்துரைக்கின்றனர். 1286-ல் குப்லாய்கான் என்ற மங்கோலிய சக்கரவர்த்திக்குத் தூது ஒருவர் அனுப்பியதாகச் சீன வரலாறு குறிக்கின்றது. முகமதியருடன் நட்புற்றிருக்க, அவர்கள் பின்னர் தென்னிந்திய நிகழ்ச்சிகளில் கலந்து முகமதிய மந்திரிகளை நியமித்துச் செல்வம், வலிமைகளில் சிறப்பாராயினர்.

திருநெல்வேலி ஜில்லா பழங்காயல் என்ற துறைமுகவாயிலாகத் தென்னிந்தியருக்கும், சீனருக்கும்

வாணிபம் பெருகிற்று. இஃது பாரசீக வரலாற்று ஆசிரியர் வாசவ்என்பவரால் சிறப்பிக்கப்படுகிறது. குலசேகரன் மலைநாட்டுக் கொல்லத்தைக் கொண்டமையால் 'கொல்லங் கொண்டான்' என்றும், 'கோனேரின்மை கொண்டான்' என்றும் சிறப்பிக்கப்படுவான். இவர்கள் காலத்து மாவலிவாணவராயன் என்ற பட்டமுடைய பல அரசியல் தலைவர்களும் ஆங்காங்கிருந்துள்ளனர்.

குலசேகரபாண்டியனுக்குப் பட்டத்தரசி மகனாகிய சுந்தர பாண்டியனும், காதற்கிழத்தி மகனாகிய வீரபாண்டியனும் என இரண்டு ஆண்மக்கள் இருந்தனர். இவருள் வீர பாண்டியற்கு, குலசேகரன் 1296-ல் பட்டம் சூட்டினான். பட்டத்தரசி மகன் சுந்தர பாண்டியன் தன் தந்தை செயலை வெறுத்து உரிமை கிடைக்கும் வகையில், டெல்லி அல்லாவுடீன் சக்கரவர்த்திக்கு முறையிட்டனன். உள் நாட்டில் குழப்பம் ஏற்பட்டவுடன் அல்லாவுடீன் சில்ஜி தம் படைத்தலைவன் மாலிக்காபூரை பாண்டிநாட்டிற்கு அனுப்பி வைத்தான். கலகத்தை ஒடுக்க வந்த மாலிக்காபூர் கலகத்தை ஒடுக்கிப் பெரும் பொருளைக் கொள்ளையிட்டுச் சென்றனன். இதற்கிடையில் சுந்தர பாண்டியன் குலசேகரனையும் கொன்று பட்டமும் சூடிக்கொண்டு 1314 வரை ஆண்டதாகத் தெரிகின்றது. பயந்தோடிய வீர பாண்டியனும் 1342 வரை வேறிடத்திலிருந்து ஆண்டுள்ளான் என்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

மாலிக்காபூர் படையெடுத்ததைப்பற்றி வகாபும் அமீர்குசுரு என்பாரும் குறிப்புகள் எழுதியுள்ளனர். குறிப்புக்களின்படி முகமதிய கொள்ளையால் பாண்டியநாடு சீரும் சிறப்புமிழந்து வறுமை எய்தியதோடு மக்கள் இன்னல்களுக்கும் உள்ளாயினர் என்பது தெரிகிறது. அறநிலையங்களும், கோயில்களும் அழிவுற்றன. பாண்டியநாட்டின் குழப்பங்கண்ட சேரன் இரவி வர்மகுலசேகரன் படையெடுத்துச் சென்று சிற்சில பகுதிகளைக் கைப்பற்றினன். சம்புவராயர் வாணாதிராயர் என்ற சில குறுநில மன்னர்கள் திறைமறுத்து தனியரசுபுரியத் தொடங்கினர். வீர பாண்டியன் ஆசம்ஷா என்பவரிடம் நாட்டை இழந்து வேறிடம் சென்றான். டெல்லி முகமது துக்ளக்கால் அனுப்பப்பட்ட ஆசம்ஷா நாட்டைக் கவர்ந்து, பிரதிநிதியாக அரசாளத் தொடங்கிச், சுயேச்சையாக கி.பி. 1330-ல் ஆளத்தொடங்கினன். இவனுக்குப் பின் 1377 வரை சிக்கந்தர்ஷா இறுதியாக, பல முகமதியர் ஆண்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சி அறிந்த விஜயநகர வேந்தன் குமாரசம்பண்ணன் பெரும்படையுடன் வந்து முகமதியராட்சியை ஒழித்து மக்களையும் சமயத்தையும் பாதுகாக்க முற்பட்டான். இப் படையெடுப்பிற்குப் பதின்மூன்றாண்டுகளின் பின்னரே முகமதியராட்சி முற்றும் ஒழிந்திருக்கவேண்டும். 14-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டியமன்னர் திருநெல்வேலி ஜில்லாவில் தங்கி அரசுசெலுத்தி யிருக்கவேண்டும்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள கல்வெட்டில் 'மாவலி வாணதிராயர் சீர்மை மதுரை மண்டலம்' என்று கூறப்படுகிறது. நெக்கோணஊர் கல்வெட்டு 1483-ல் அவர்கள் தம்மை 'பாண்டியர் குலாந்தகன்' என்றும், 'மதுராபுரி மகாநாயகன்' என்றும் குறித்துள்ளமை தெரிவிக்கும்.

14-ம் நூற்றாண்டின் இறுதியிலும் 15-ம் நூற்றாண்டின் தொடக்கத்தும் தென் பாண்டிநாட்டில் அரசு செலுத்திய பராக்கிரம பாண்டியன் என்ற பெயருடன் விளங்கிய பாண்டியர் (கி. பி. 1387-1434) மூவருள் திருக்குற்றாலத் திருப்பணிபுரிந்தவர் முதல்வர். சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் என்பவன் கி. பி. 1422 முதல் 1463 வரை அரசாண்டவன் என்றும், இருமொழிப்புலமையுடையவன் என்றும் தென்காசிக் கல்வெட்டால் விளங்கும்.

இவன் திருக்குற்றாலத்தில் சேரனை வென்றான். தென்காசிக் கோயிலைக் கட்டித் திருப்பணிகள் செய்து திருநெல்வேலிச் சிவபெருமானுக்கு அர்த்தயாம தரிசனத்துக்கு நிபந்தங்கள் விட்டு இறையிலியும் அளித்துள்ளான் என்பது கல்வெட்டுக்களால் விளங்கும். எத்தகைய குறைகளுமின்றி இக் கோயிலைப் பாதுகாத்துவருமாறு சிவனடியார்களையும் வழித்தோன்றல்களையும் வேண்டிக்கொண்டுள்ளான். கி. பி. 1429-73வரை தன் தமையன் பராக்கிரம பாண்டியனுடன் தென் பாண்டிநாட்டை

ஆண்ட சடையவர்மன் குலசேகர பாண்டியனே தென்காசிக் கோபுரத் திருப்பணியைச் சீர்பெற முடித்தவன்.

பின் சடையவர்மன் மகன் அழகன் பெருமாள் பராக்ரம பாண்டியன் (1473-1506) அரசாண்டான். இனி ஆகவராமனும் அவனுக்குமுன்பு அபிராம பராக்ரம பாண்டியனும் அரசாண்டனர் என்று புதுக்கோட்டைச் செப்பேடறிவிக்கும். ஆகவராமன் புதல்வன் சடையவர்மன் சீவல்லபாண்டியன் 1534-43வரை அரசாண்டவன். இவன் தன் நாட்டைக் கைப்பற்றிய உதயமார்த்தாண்ட வர்மன் செய்தியை விஜயநகரதேவன் அச்சுததேவராயனிடம் முறையிட அவன் படையுடன்வந்து தனக்கு அதுவரை கப்பம் செலுத்தாதிருந்த சேரரையும் வென்று தென்பாண்டிநாட்டை மீட்டுக்கொடுத்தனன். பின் அபிராமபராக்ரம பாண்டியன் மூதற்புதல்வன் சடையவர்மன் பராக்ரம குலசேகர பாண்டியன் 1543 முதல் 52 வரையிலும் அவனிளவல் நெல்வேலிமாறன் 1551-64 வரையிலும் ஆண்டுள்ளனர். நெல்வேலிமாறன் மூதல்மகன் சடையவர்மன் அதிவீரராமபாண்டியன். இவன் கி. பி. 1564 முதல் 1604 வரை அரசு செலுத்தியவன். அழகன் சீவலவேல் என்று வழங்கப்பெறும் இவன் தென்காசியில் குலசேகரமுடையாராலயம் ஒன்று எடுத்துள்ளான். செந்தமிழ்ப் புலமைமிக்கவன். வெற்றிவேற்கை, நைடதம், கூர்மபுராணம், முதலிய

நூல்கள் இயற்றியுள்ளான். பராக்கிரம குலசேகரன் மகன் இரண்டாமவன் வரதுங்கராம பாண்டியன். இவன் கரிவலம்வந்தநல்லூரில் இருந்து அரசாண்டவன். 1588-ல் முடிசூட்டப்பெற்றவன். கருவைபற்றிய அந்தாதிகள் பாடியுள்ளான். கி. பி. 1613ல் முடிசூட்டி வரகுணராம குலசேகரனும் 1748ல் வரகுணராம பாண்டிய குலசேகர தேவ தீக்ஷிதர் என்றவர்களும் பாண்டிய மரபின் பிற்ரோன்றல்கள். இவர்கள் விஜயநகர வேந்தர்க்குக் கப்பஞ்செலுத்திக் குறுநிலமன்னராயிருந்தனர்.

சுமார் 48 யாண்டுகள் சுயேச்சையாய் மதுரையை ஆண்டுவந்த முஸல்மான் ஆட்சியை, இந்து விஜயநகர மன்னர்கள் 1365-ல் அழித்தொழித்தனர். அடுத்த இரண்டு நூற்ருண்டுகட்கிடையே மூக்மதிய படையெடுப்பே இல்லாமலிருந்தது. விஜயநகர மன்னர் வழிவந்த கம்பண உடையார் விஜயநகர் ஆட்சிக்குட்பட்டுத் தம் ஆட்சியை ஏற்படுத்தினர். மூகமதிய அரசரால் மதுரைக் கோயில் அழிபட்டது கேட்டு, கி. பி. 1372-ல் மதுரை நோக்கிப் படையெடுத்துத் துருக்கரை வென்று கோயிலைத் திருக்காப்பு நீக்கிப் பழையபடியே வேண்டிய சிறப்பை யெல்லாம் செய்வித்தவர். இவர் வமிசத்தார் 1404 வரை ஆண்டிருப்பாரென்று நெல்சன் குறிக்கிருர். இதன் பின்னெலாம் விஜயநகர வேந்தர்க்குக் கீழ்ப்பட்ட, நாயக்கர் என்ற பட்டமும் கொண்ட தலைவர்களாலேயே

தமிழ்நாடு ஆளப்பெற்றுளது. இரண்டாம் தேவ ராயனும், கிருஷ்ணராயனும் தென்னாட்டாட்சியில் சிறப்புற விளங்கினர். 1532-ல் திருவாங்கூர் மன்னன் விஜயநகரத்து ஆணைக்கடங்காது பாண்டிய நாட்டின் பல பகுதிகளையும் மேற்கொள்பவனானன். இதையும் மற்றும் ஏற்பட்ட தெலுங்குப் பிரதானிகள் அக்கிரமத்தையும் அடக்குமுறையில் அச்சுத மன்னன் (1530—42 வரை) ஓர் பெரும் படையைத் தென்கோடிக் கனுப்பினன். கலகஞ் செய்தவர்களை யொடுக்கித் திருவாங்கூர் மன்னனைக் கப்பம் கட்டுவித்துப் பாண்டிய மன்னன் மகளையும் மணந்து, பாண்டியரது உறவைப் பெருக்கிக் கொண்டான்.

1543-ல் விஜயநகர இளவரசன் விட்டல ராயன் (1547—58) திருவனந்தபுரத்தின் மேல் இரண்டாம் முறை படையெடுத்து மதுரையிலிருந்து ஆண்டுவந்தான்.

1559-ல் பின் இரண்டு நூற்றாண்டுகள் வரை பாண்டிய நாடாண்ட நாயக்கர் வமிசம் ஏற்பட்டது. விட்டலராயன் ஆட்சி முடிவில் சோழ நாடாண்டு வந்தவன் மதுரை மீது படையெடுத்துப் பாண்டியனை அரசு கட்டிலிலிருந்தும் இறக்கினன். அவன் விஜயநகர மன்னனிடம் முறையிட்டான். முறை செய்ய அனுப்பப்பெற்ற நாகமநாயக்கன் சோழ மன்னனை யடக்கி மதுரையைக் கைக்கொண்டு

பாண்டியனுக்கு உதவிபுரியாது தனது அரசன் ஆணையை மீறி, தானே மதுரையதிகாரியாய் விளங்கினன். விஜயநகர அரசன் தனது ஆணை மீறிய நாகமநாயக்கனை யடக்கி மீட்கும் ஆற்றலுடையவர் யாவரென்று கேட்டகாலத்து, அவன் மகன் விசுவநாதனே முன்வந்து அப்பணி புரிவேனென, அவனையனுப்ப, அவன் தன் தந்தையைப் போரில் வென்று, சிறைப்படுத்தி, அரசன் மன்னிப்பைப் பெறுவித்து, பின் அரசன் விருப்பப்படியே 1559-ல் நாயக்கர் வம்சம் முதலரசனுயினன்.

இவன் பாண்டியநாட்டைக் காவற்படுத்த 72 பாளையப்பட்டுக்கள் ஏற்படுத்தினன். வையை நீர்ப் பாசனத்துக்குப் பயன்படுமாறு பேரணை, சிற்றணை வகுத்தான். இவற்றை அமைக்கும் வகையிற்றுணை புரிந்தவர் பிரதம மந்திரியும், தளவாயுமான அரிய நாயக முதலியார். விசுவநாதன் திருச்சிக்கோட்டையைத் தனக்காக்கி வல்லத்தைத் தஞ்சை நாயக்கர்க் களித்தான். 1563-ல் விசுவநாதர் இறக்க அவன் மகன் குமாரகிருஷ்ணப்பன் சிம்மாசனம் ஏறினன். கலகம் செய்த கும்பிச்சி நாயக்கன் தலை கொய்யப்பட்டது. இவனுக்குப் பின் 1573 முதல் 1595 வரை இவன் இரண்டு குமாரர்களும், அதற்குப் பின் அவனது இரண்டு குமாரர்களும் 1602 வரை ஆளலாயினர். 1602 முதல் 1609 வரை முத்து கிருஷ்ணப்பன் ஆண்டான். இராமநாதபுர சேதுபதி ஏற்பட்டது இவன் காலத்துச் சிறப்பு. முத்து

வீரப்பன் 1609—23 வரை ஆண்டான். இவனே மதுரையினின்றும் திருச்சிக்குத் தன் தலைநகரை 1616-ல் மாற்றினன்.

விஜயநகர மன்னன், முதலாம் வேங்கடன் இறந்ததும் அதன்மேலேற்பட்ட குழப்பமும், முத்துவீரப்பனை விஜயநகர ஆட்சிக்குக் கீழ்ப்படா தொழியச் செய்தன. முத்துவீரப்பனுக்குப் பின் அவனதிளைய சகோதரன் திருமலைநாயக்கர் 1623-ல் அரியணை யமர்ந்தார். இவர் சிவநேசச் செல்வர். வைணவத்திலும் பற்றுடையவர். இவரே மீண்டும் மதுரையைத் தலைநகராக்கியவர். மீனட்சியம்மன் கோயிலை நன்கு திருத்தி யமைத்தவர். மதுரை வரும் யாத்திரீகர்கள் எவரும் கண்டுகளிக்கக் காட்சி யாய் விளங்கும் மஹால் (அரண்மனை), புதுமண்டபம், தெப்பக்குளம், ராஜகோபுரம், தமுக்கம் இவை களை அமைத்தவர். சேது வம்சத்துக்குப் பெருந் துணைபுரிந்தவர்.

விஜயநகராட்சியின் வீழ்ச்சிகண்டு தாமே சுவா தீனமாய் ஆள முற்பட்டவர். நாட்டுவளர்ச்சிக்குற்ற நற்பணிகளைப் புரிவதில் அவர் பொருள் பயன் ப்டுத்தப்பட்டது. 1659ல் திருமலை நாயக்கர் இறந் ததும், முத்துவீரப்ப நாயக்கர் அரசபாரந்தாங்கி ஞர். இவர்க்குப்பின் சொக்கநாத நாயக்கர் 1659 1682 வரை ஆண்டார். அவர் 1682ல் இறந்ததும், III முத்துவீரப்ப நாயக்கராகிய அவரது மகன்,

1682-89 வரை ஆண்டார். அவருடைய மகன் ரங்க கிருஷ்ண முத்துவீரப்பன் இறக்க, கருப்பமுற்றிருந்த அவர் மனைவி முத்தம்மாள் உடன்கட்டையேறத் துணிய, மாமியார் மங்கம்மாளின் வேண்டுகோட்படி, விஜயரங்க சொக்கநாதன் பிறந்ததும், தாயும் உயிர் துறந்தனள்.

நாட்டுக்குச் செய்யும் பொதுநலச் சேவையே பெரிதெனக்கொண்டு, சொக்கநாதர் இறந்தகாலத்தும் உயிர் துறவாத மங்கம்மாள் பேரனுக்கு பிரதிநிதியாயிருந்து நாட்டை ஆண்டுவரலானாள். இவள் காலத்துக்கேற்ற நடவடிக்கை எடுக்கும் திறத்தையுடையவள். இவள் பொதுமக்களுக்கு உதவியாக சாலைகள் நிறுவியும், சத்திரங்கள் கட்டியும், பல வகைத் தருமங்களையும் செய்துள்ளாள். இங்ஙனம் 18 ஆண்டுகள் ஆண்டு 1706ல் விஜயரங்க சொக்கநாதனிடம் ஆட்சியைக்கொடுத்து விண்ணுலகடைந்தாள். 1732ல் மகவின்றி இறக்க, அவன் மனைவி மீனாட்சி ஆள முற்பட்டு பெங்காரு திருமலாவின் மகன் விஜயகுமாரனை சுவீகாரம் செய்துகொண்டாள். ஆனால் பெங்காரு திருமலாவே தளவாய் வெங்கடாச்சாரியின் துணைகொண்டு மீனாட்சியை அரசினின்றும் நீக்க முயன்றான். இந்நிலையறிந்த ஆர்க்காட்டுநவாபு தன்மகன் சப்தார் ஆலி, மருமகன் சந்தாசாகிபு இவர்களைப் பெரும்படையுடன் 1734ல் அனுப்பி, மதுரையையும் தஞ்சையையும் கப்பம் கட்டாவிடில் கீழ்ப்படுத்திவர அனுப்பினான்.

பெங்காரு சப்தர் ஆலியை லஞ்சம் கொடுத்துத் தனக்குத் துணைபுரிய வேண்டினன். மீனுட்சியும் சந்தாசாகிபைத் தனக்குத் துணைபுரியவேண்டி நின்றாள். இடையில் மீனுக்ஷி தந்திரமாக பெங்காருவுடன் சமாதானம் செய்துகொண்டாள். சந்தாசாகிபு மீண்டும் 1736ல் திருச்சிவந்து மீனுட்சியை நிலைகுலைக்கப் பார்த்தான். அவளைப் படைத்தொகையைத் குறைக்கவேண்டினன். அவள் சந்தாவின் போக்கை உணரும்படி காலங்கடத்தினள். பெங்காரு திருமலாவசமிருந்த திண்டுக்கல்லைக் கைப்பற்ற சந்தாசாகிபு ஓர் பெரும்படையை அனுப்பினன். திண்டுக்கல் கொள்ளையடிக்கப்பட்டது. சந்தாசாகிபு மதுரை சென்றான். பங்காரு எதிரியைத் தோற்கடிக்க அம்மைநாயக்கனூரில் நடத்திய போரில் தோல்வியுற்றுச் சிவகங்கையிற் சரண் புகுந்தான். சந்தாசாகிபு தன் எண்ணப்படி மீனுட்சியை அரண்மனையிற் சிறைப்படுத்தினன். அவள் அங்கு நஞ்சுண்டு இறந்தாள். இத்துடன் நாயக வம்சம் முடிவுற்றது. பங்காருவின் பின் முயற்சியும் பயன்படவில்லை.

பின்னர் இடையிலேற்பட்ட முகமதியராட்சியில் உண்டான அல்லல்களைத் தலத்தாரும் சேதுபதி முதலியவர்கள் துணைகொண்டு தவிர்த்தார்கள். பின்னர் 1801ம் ஆண்டளவில் கிழக்கிந்தியக் கம்பெனியார் கையில் நாடு சேர, அவர்கள் ஆட்சி புரியலாயினர்.

---

உ

சிவமயம்

# மதுரை ஆண்ட நாயக்க அரசர்கள்.

## பிரதிநிதிகள்.

| | | |
|---|---|---|
| கி. பி. | 1404 | இலக்ஷ்மண நாயுடு |
| ,, | 1449-1500 | நரச நாயுடு |
| ,, | 1451 ,, | முத்தண்ண நாயுடு |
| ,, | 1500-1515 | தென்னம்ம நாயுடு |
| ,, | 1515-1519 | நரசிம்ம நாயுடு |
| ,, | 1519-1524 | குருகுரு திம்ம நாயுடு |
| ,, | 1524-1526 | கட்டியம் காமய நாயுடு |
| ,, | 1526-1530 | சின்னப்ப நாயுடு |
| ,, | 1530-1535 | ஜகதேவ நாயுடு |
| ,, | 1535-1544 | விசுவநாத நாயுடு |
| ,, | 1544-1545 | வருதப்பநாயுடு |
| ,, | 1545-1546 | தொம்பச்சி நாயுடு |
| ,, | 1546-1547 | விசுவநாத நாயுடு |
| ,, | 1547-1558 | விட்டல் நாயுடு |

## முடிசூடியவர்கள்.

1. நாகம நாயுடு கி. பி. 1533.

2. விசுவநாத நாயுடு (1) 1559-1563.

3. குமாரகிருஷ்ணப்பநாயுடு 1563-1573.

4. கிருஷ்ணப்ப நாயுடு, பெரிய வீரப்பநாயுடு, விசுவநாத நாயுடு 1573-1595.

5. லிங்கய நாயுடு, விசுவநாத நாயுடு 1595-1602.

6. முத்துகிருஷ்ணப்ய நாயுடு 1602-1609.

7. முத்துவீரப்ப நாயுடு 1609-1623.

8. திருமலை நாயுடு 1623-1659.

9. முத்து அளகிரி நாயுடு 1659-1660.

10. சொக்கநாத நாயுடு 1660-1682.

11. முத்துலிங்கய்ய நாயுடு 1677-1682.

12. இரங்ககிருஷ்ண முத்துவீரப்ப நாயுடு 1682-1689.

13. மங்கம்மகாரு 1689-1704.

14. விஜயரகுநாத சொக்கலிங்க நாயுடு 1604-1731.

15. மீனாக்ஷியம்மகாரு 1731-1736.

16. பங்காரு திருமலை நாயுடு, விஜயரகுநாத நாயுடு 1736.

உ

சிவமயம்

# வேண்டுகோள்

உனக்குப் பணிசெய்ய; உன் தனைஎந் நாளும்
நினைக்க; வரம்எனக்கு நீதா — மனக்கவலை
நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே! எவ்வுலகும்
ஆக்குகின்ற சொக்கநா தா;

திருச்சிற்றம்பலம்.

— குருஞானசம்பந்தர்.



தருமபுர ஆதீன மடாலயத்தில் ஸ்ரீசொக்கநாத சுவாமி ஆலயம்.

உ
குருபாதம்

# திருமுறைச் சிறப்பு

பாலைசெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனைஅன் றேவிக் கராங்கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம்போல் அல்லாமை காண்.

— திருக்களிற்றுப்படியார்.

ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய்—சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

— சிவபோகசாரம்.

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் எஞ்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே? மாமறைநூல் தான்எங்கே?
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே?

— சிவானந்தமாலை.



சம்பந்தர்.

கடிஅவிழ் கடுக்கை வேணித்
    தாதைபோல் கனல்கண் மீனக்
கொடியனை வேவ நோக்கிக்
    குறைஇரந்து அனையான் கற்பிற்
பிடியன நடையாள் வேண்டப்
    பின்உயிர் அளித்துக் காத்த
முடியணி மாடக் காழி
    முனிவனை வணக்கம் செய்வாம்.

—பரஞ்சோதிமுனிவர்.

சிவமயம்

# திருஞானசம்பந்தசுவாமிகள் திருப்பதிகங்கள்.

## திருவிருக்குக்குறள்

பண் – குறிஞ்சி

இராகம்-யதுகுலகாம்போதி.] [தாளம்-திருபுடை.

திருச்சிற்றம்பலம்

நீல மாமிடற், றால வாயிலான்
பால தாயினர், ஞால மாள்வரே. 1

ஞால மேழுமாம், ஆல வாயிலார்
சீல மேசொலீர், காலன் வீடவே. 2

ஆல நீழலார், ஆல வாயிலார்
கால காலனர், பால தாமினே. 3

அந்த மில்புகழ், எந்தை யாலவாய்
பந்தி யார்கழல், சிந்தை செய்ம்மினே. 4

ஆட லேற்றினன், கூடலா லவாய்
பாடி யேமனம், நாடி வாழ்மினே. 5

அண்ண லாலவாய், நண்ணி னன்றனே
எண்ணி யேதொழத், திண்ண மின்பமே. 6

அம்பொ னாலவாய், நம்ப னார்கழல்
நம்பி வாழ்பவர், துன்பம் வீடுமே. 7

அரக்க னார்வலி, நெருக்க னாலவாய்
உரைக்கு முள்ளத்தார்க், கிரக்க முண்மையே. 8

அருவ னாலவாய், மருவி னன்றனே
இருவ ரேத்தநின், றுருவ மோங்குமே. 9

ஆர நாகமாம், சீர னாலவாய்த்
தேர மண்செற்ற, வீர னென்பரே. 10

அடிக ளாலவாய்ப், படிகொள் சம்பந்தன்
முடிவி லின்றமிழ், செடிக ணீக்குமே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருநீற்றுப்பதிகம்

பண் - காந்தாரம்

இராகம்-நவரோஸ்.] [தாளம்-ரூபகம்.

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு
வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு
துதிக்கப் படுவது நீறு

தந்திர மாவது நீறு
சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
திருவால வாயான் திருநீறே. 1

வேதத்தி லுள்ளது நீறு
வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு
புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு
உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த
திருவால வாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு
முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு
தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு
பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு
திருவால வாயான் திருநீறே. 3

காண வினியது நீறு
கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம்
பெருமை கொடுப்பது நீறு

மாணந் தகைவது நீறு
மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு
திருவால வாயான் திருநீறே. 4

பூச வினியது நீறு
புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு
பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு
அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு
திருவால வாயான் திருநீறே. 5

அருத்தம தாவது நீறு
அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு
வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு
புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த
திருவால வாயான் திருநீறே. 6

எயிலது அட்டது நீறு
இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு
பாக்கிய மாவது நீறு

துயிலைத் தடுப்பது நீறு
சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்
தால வாயான் திருநீறே. 7

இராவணன் மேலது நீறு
எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு
பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு
தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி
ஆல வாயான் திருநீறே. 8

மாலொ டயனறி யாத
வண்ண முமுள்ள து நீறு
மேலுறை தேவர்கள் தங்கள்
மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கும்
இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம்
ஆல வாயான் திருநீறே. 9

குண்டிகைக் கையர்க ளோடு
சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு
கருத இனியது நீறு

எண்டிசைப் பட்ட பொருளார்
ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும்
ஆல வாயான் திருநீறே. 10

ஆற்ற லடல்விடை யேறும்
ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும்
பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற
தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும்
வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்.

**பண் — கொல்லி**

இராகம் - **நவரோஸ்.]** [தாளம்-**சாப்பு.**

திருச்சிற்றம்பலம்

மானினேர்விழி மாதராய்வழு
திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவன்
என்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய
இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு
வாலவாயர னிற்கவே. 1

ஆகமத்தொடு மந்திரங்க
ளமைந்தசங்கத பங்கமாப்
பாகதத்தொ டிரைத்துரைத்த
சனங்கள்வெட் குறு பக்கமா
மாகதக்கரி போற்றிரிந்து
புரிந்துநின் றுணு மாசுசேர்
ஆகதர்க்கெளி யேனலேன் றிரு
வாலவாயர னிற்கவே. 2

அத்தகுபொரு ளுண்டுமில்லையு
மென்றுநின் றவர்க் கச்சமா
ஒத்தொவ்வாமை மொழிந்துவாதி
லழிந்தெழுந்த கவிப்பெயர்ச்
சத்திரத்தின் மடிந்தொடிந்து
சனங்கள்வெட்குற நக்கமே
சித்திரர்க்கெளி யேனலேன் றிரு
வாலவாயர னிற்கவே. 3

சந்துசேன னு மிந்துசேன னுந்
தருமசேன னுங் கருமைசேர்
கந்துசேன னுங் கனகசேன னு
முதலதாகிய பெயர்கொளா
மந்திபோற்றிரிந் தாரியத்தொடு
செந்தமிழ்ப்பய னறிகிலா
அந்தகர்க்கெளி யேனலேன் றிரு
வாலவாயர னிற்கவே. 4

கூட்டினார்கிளி யின்விருத்த
முரைத்ததோரொலி யின்றெழிற்
பாட்டுமெய்சொலிப் பக்கமேசெனு
மெக்கர்தங்களைப் பல்லறம்
காட்டியேவரு மாடெலாங்கவர்
கையரைக்கசி வொன்றிலாச்
சேட்டைகட்கெளி யேனலேன்றிரு
வாலவாயர னிற்கவே. 5

கனகநந்தியும் புட்பநந்தியும்
பவணநந்தியுங் குமணமா
சுனகநந்தியுங் குனகநந்தியுந்
திவணநந்தியு மொழிகொளா
அனகநந்தியர் மதுவொழிந்தவ
மேதவம்புரி வோமெனும்
சினகருக்கெளி யேனலேன்றிரு
வாலவாயர னிற்கவே. 6

பந்தணம்மவை யொன்றிலம்பரி
வொன்றிலம்மென வாசக
மந்தணம்பல பேசிமாசறு
சீர்மையின்றிய நாயமே
அந்தணம்மரு கந்தணம்மது
புத்தணம்மது சித்தணச்
சிந்தணர்க்கெளி யேனலேன்றிரு
வாலவாயர னிற்கவே. 7

மேலெனக்கெதி ரில்லையென்ற
அரக்கனார்மிகை செற்றதீப்
போலியைப்பணி யக்கிலாதொரு
பொய்த்தவங்கொடு குண்டிகை
பீலிகைக்கொடு பாயிடுக்கி
நடுக்கியேபிறர் பின்செலும்
சீலிகட்கெளி யேனலேன்றிரு
வாலவாயர னிற்கவே. 8

பூமகற்கு மரிக்குமோர்வரு
புண்ணியன்னடி போற்றிலார்
சாமவத்தையி னார்கள்போல்தலை
யைப்பறித்தொரு பொய்த்தவம்
வேமவத்தைசெ லுத்திமெய்ப்பொடி
யட்டிவாய்ச கதிக்குநேர்
ஆமவர்க்கெளி யேனலேன்றிரு
வாலவாயர னிற்கவே. 9

தங்களுக்குமச் சாக்கியர்க்குந்
தரிப்பொணாதநற் சேவடி
எங்கணாயக னேத்தொழிந்திடக்
கேடுத்தொரு பொய்த்தவம்
பொங்குநூல்வழி யன்றியேபுல
வோர்களைப்பழிக் கும்பொலா
அங்கதர்க்கெளி யேனலேன்றிரு
வாலவாயர னிற்கவே. 10

எக்கராமமண் கையருக்கெளி
யேனலேன் றிரு வாலவாய்ச்
சொக்கன் என்னு ளிருக்கவேதுளங்
கும்முடித்தென்னன் முன்னிவை
தக்கசீர்ப்புக லிக்குமன் தமிழ்
நாதன்ஞான சம் பந்தன்வாய்
ஒக்கவேயுரை செய்தபத்தும்
உரைப்பவர்க்கிட ரில்லையே. 11

திருச்சிற்றம்பலம்.

பண் — கௌசிகம்

இராகம்-பைரவி.] [தாளம்-ஆதி.

திருச்சிற்றம்பலம்

காட்டு மாவ துரித்துரி போர்த்துடல்
நாட்ட மூன்றுடை யாயுரை செய்வனுன்
வேட்டு வேள்விசெய் யாவமண் கையரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே. 1

மத்த யானையி னீருரி மூடிய
அத்த னேயணி யாலவா யாய்பணி
பொய்த்த வன்றவ வேடத்த ராஞ்சமண்
சித்த ரையழிக் கத்திரு வுள்ளமே. 2

மண்ண கத்திலும் வானிலு மெங்குமாம்
திண்ண கத்திரு வாலவா யாயருள்
பெண்ண கத்தெழிற் சாக்கியப் பேயமண்
தெண்ணர் கற்பழிக் கத்திரு வுள்ளமே. 3

ஓதி யோத்தறி யாவம ணாதரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
ஆதி யேதிரு வாலவா யண்ணலே
நீதி யாக நினைந்தருள் செய்திடே. 4

வைய மார்புக ழாயடி யார்தொழும்
செய்கை யார்திரு வாலவா யாய்செப்பாய்
கையி லுண்டுழ லுமமண் கையரைப்
பைய வாதுசெ யத்திரு வுள்ளமே. 5

நாறு சேர்வயல் தண்டலை மிண்டிய
தேற லார்திரு வாலவா யாய்செப்பாய்
வீறி லாத்தவ மோட்டமண் வேடரைச்
சீறி வாதுசெ யத்திரு வுள்ளமே. 6

பண்ட டித்தவத் தார்பயில் வாற்றெழும்
தொண்ட ருக்கெளி யாய்திரு வாலவாய்
அண்ட னேயமண் கையரை வாதினில்
செண்ட டித்துள றத்திரு வுள்ளமே. 7

அரக்கன் றான்கிரி யேற்றவன் றன்முடிச்
செருக்கி னைத்தவிர்த் தாய்திரு வாலவாய்ப்
பரக்கு மாண்புடை யாயமண் பாவரைக்
கரக்க வாதுசெ யத்திரு வுள்ளமே. 8

மாலு நான்முக னும்மறி யாநெறி
ஆல வாயுறை யும்மண்ண லேபணி
மேலை வீடுண ராவெற்ற ரையரைச்
சால வாதுசெ யத்திரு வுள்ளமே. 9

கழிக்க ரைப்படு மீன்கவர் வாரமண்
அழிப்ப ரையழிக் கத்திரு வுள்ளமே
தெழிக்கும் பூம்புனல் சூழ்திரு வாலவாய்
மழுப்ப டையுடை மைந்தனே நல்கிடே. 10

செந்தெ னாமுர லுந்திரு வாலவாய்
மைந்த னேயென்று வல்லம ணாசறச்
சந்த மார்தமிழ் கேட்டமெய்ஞ் ஞானசம்
பந்தன் சொற்பக ரும்பழி நீங்கவே. 11

திருச்சிற்றம்பலம்.

பண் — கௌசிகம்

இராகம் - **பைரவி.**] [தாளம் - **ஆதி.**

திருச்சிற்றம்பலம்

செய்ய னேதிரு வாலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பையவேசென்று பாண்டியற் காகவே. 1

சித்த னேதிரு வாலவாய் மேவிய
அத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எத்த ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பத்திமன் றென்னன் பாண்டியற் காகவே. 2

தக்கன் வேள்வி தகர்த்தரு ளாலவாய்ச்
சொக்க னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எக்க ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பக்க மேசென்று பாண்டியற் காகவே. 3

சிட்ட னேதிரு வாலவாய் மேவிய
அட்ட மூர்த்திய னேயஞ்ச லென்றருள்
துட்ட ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பட்டி மன்றென்னன் பாண்டியற் காகவே. 4

நண்ண லார்புர மூன்றெரி யாலவாய்
அண்ண லேயஞ்ச லென்றருள் செய்யெனை
எண்ணி லாவம ணர்கொளு வுஞ்சுடர்
பண்ணி யற்றமிழ்ப் பாண்டியற் காகவே. 5

தஞ்ச மென்றுன் சரண்புகுந் தேனையும்
அஞ்ச லென்றரு ளாலவா யண்ணலே
வஞ்சஞ் செய்தம ணர்கொளு வுஞ்சுடர்
பஞ்ச வன்றென்னன் பாண்டியற் காகவே. 6

செங்கண் வெள்விடை யாய்திரு வாலவாய்
அங்க ணுவஞ்ச லென்றருள் செய்யெனைக்
கங்கு லாரமண் கைய ரிடுங்கனல்
பங்கமில் தென்னன் பாண்டியற் காகவே. 7

தூர்த்தன் வீரந் தொலைத்தரு ளாலவாய்
ஆத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
ஏத்தி லாவம ணர்கொளு வுஞ்சுடர்
பார்த்தி வன்றென்னன் பாண்டியற் காகவே. 8

தாவி னயன் றனறி யாவகை
மேவி னய்திரு வாலவா யாயருள்
தூவி லாவம ணர்கொளு வுஞ்சுடர்
பாவி னன்றென்னன் பாண்டியற் காகவே. 9

எண்டி சைக்கெழி லாலவாய் மேவிய
அண்ட னேயஞ்ச லென்றருள் செய்யெனைக்
குண்ட ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பண்டிமன் றென்னன் பாண்டியற் காகவே. 10

அப்ப னாலவா யாதி யருளினால்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்த னுரைபத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே. 11

*திருச்சிற்றம்பலம்.*

## திருவிராகம்

**பண் — கௌசிகம்**

*இராகம்* - **பைரவி.**] [*தாளம்* - **ரூபகம்.**

*திருச்சிற்றம்பலம்*

வீடலால வாயிலாய் விழுமியார்க ணின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

பட்டிசைந்த வல்குலாள் பாவையாளோர் பாகமா
ஒட்டிசைந்த தன்றியும் முச்சியாளொ ருத்தியாக்
கொட்டிசைந்த ஆடலாய் கூடலால வாயிலாய்
எட்டிசைந்த மூர்த்தியா யிருந்தவாறி தென்னையே.

குற்றநீ குணங்களீ கூடலால வாயிலாய்
சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ யருத்தமின்ப மென்றிவை
முற்றுநீ புகழ்ந்துமுன் னுரைப்பதென் முகம்மனே.

முதிருநீர்ச் சடைமுடி முதல்வனீ முழங்கழல்
அதிரவீசி யாடுவா யழகனீ புயங்கனீ
மதுரனீ மணாளனீ மதுரையால வாயிலாய்
சதுரனீ சதுர்முகன் கபாலமேந்து சம்புவே. 4

கோலமாய நீண்மதிற் கூடலால வாயிலாய்
பாலனாய தொண்டுசெய்து பண்டுமின்று முன்னையே
நீலமாய கண்டனே நின்னையன்றி நித்தலுஞ்
சீலமாய சிந்தையிற் றேர்வதில்லை தேவரே. 5

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. 6

ஆதியந்த மாயினா யாலவாயி லண்ணலே
சோதியந்த மாயினாய் சோதியுள்ளொர் சோதியாய்
கீதம்வந்த வாய்மையாற் கிளர்தருக்கி னார்க்கலால்
ஓதிவந்த வாய்மையா லுணர்ந்துரைக்க லாகுமே.

கறையிலங்கு கண்டனே கருத்திலாக் கருங்கடல்
துறையிலங்கை மன்னனைத் தோளடர வூன்றினாய்
மறையிலங்கு பாடலாய் மதுரையால வாயிலாய்
நிறையிலங்கு நெஞ்சினா னினைப்பதே நியமமே. 8

தாவணவ் விடையினாய் தலைமையாக நாடொறும்
கோவணவ் வுடையினாய் கூடலால வாயிலாய்
தீவணம் மலர்மிசைத் திசைமுகனு மாலுநின்
தூவணம் மளக்கிலார் துளக்கமெய் துவார்களே. 9

தேற்றமில் வினைத்தொழில் தேரருஞ் சமணரும்
போற்றிசைத்து நின்கழற் புகழ்ந்துபுண்ணியங்கொ
கூற்றுதைத்த தாளினாய் கூடலால வாயிலாய் [ளார்
நாற்றிசைக்குமூர்த்தியாகிநின் றதென்ன நன்மையே.

போயநீர் வளங்கொளும் பொருபுனற் புகலியான்
பாயகேள்வி ஞானசம் பந்தனல்ல பண்பினால்
ஆயசொல்லின் மாலைகொண் டாலவாயிலண்ணலைத்
தீயதீர வெண்ணுவார்கள் சிந்தையாவர் தேவரே.

திருச்சிற்றம்பலம்

## நாலடிமேல்வைப்பு

### பண் – பழம்பஞ்சுரம்

இராகம்-சங்கராபரணம்.] [தாளம்-சாப்பு.

திருச்சிற்றம்பலம்

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே. 1

வைதி கத்தின் வழியொழு காதவக்
கைத வம்முடைக் காரமண் டேரரை
எய்தி வாதுசெ யத்திரு வுள்ளமே
மைதி கழ்தரு மாமணி கண்டனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே. 2

மறைவ ழக்கமி லாதமா பாவிகள்
பறித லைக்கையர் பாயுடுப் பார்களை
முறிய வாதுசெ யத்திரு வுள்ளமே
மறியு லாங்கையின் மாமழு வாளனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே. 3

அறுத்த அங்கம் ஆறாயின நீர்மையைக்
கறுத்த வாழமண் கையர்கள் தம்மொடும்
செறுத்து வாதுசெ யத்திரு வுள்ளமே
முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே. 4

அந்த ணாளர் புரியு மருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாதுசெ யத்திரு வுள்ளமே
வெந்த நீற தணியும் விகிர்தனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே. 5

வேட்டு வேள்விசெ யும்பொரு ளைவிளி
மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே
காட்டி லானை யுரித்தஎம் கள்வனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே. 6

அழல தோம்பு மருமறை யோர்திறம்
விழல தென்னு மருகர் திறத்திறம்
கழல வாதுசெ யத்திரு வுள்ளமே
தழலி லங்கு திருவுருச் சைவனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே. 7

நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவு நில்லா அமணரைத்
தேற்றி வாதுசெ யத்திரு வுள்ளமே
ஆற்ற வாள ரக்கற்கு மருளினாய்
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே. 8

நீல மேனி யமணர் திறத்துநின்
சீலம் வாதுசெ யத்திரு வுள்ளமே
மாலு நான்முக னுங்காண் பரியதோர்
கோல மேனிய தாகிய குன்றமே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே. 9

அன்று முப்புரஞ் செற்ற அழகநின்
துன்று பொற்கழல் பேணா அருகரைத்
தென்ற வாதுசெ யத்திரு வுள்ளமே
கன்றுசாக்கியர் காணாத் தலைவனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே. 10

கூட லாலவாய்க் கோனை விடைகொண்டு
ஆடன் மேனி யமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்தஇப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருவியமகம்

### பண் - பழம்பஞ்சுரம்

இராகம்-சங்கராபரணம்.] [தாளம்-சாப்பு.

திருச்சிற்றம்பலம்

ஆலநீழ லுகந்த திருக்கையே
ஆனபாட லுகந்த திருக்கையே
பாலினேர்மொழி யாளொரு பங்கனே
பாதமோதலர் சேர்புர பங்கனே
கோலநீறணி மேதகு பூதனே
கோதிலார்மன மேவிய பூதனே
ஆலநஞ்சமு துண்டக ளத்தனே
ஆலவாயுறை யண்டர்க ளத்தனே. 1

பாதியாயுடன் கொண்டது மாலையே
பாம்புதார்மலர்க் கொன்றைநன் மாலையே
கோதில்நீறது பூசிடு மாகனே
கொண்டநற்கையின் மானிட மாகனே
நாதனுடொறு மாடுவ தானையே
நாடியன்றுரி செய்தது மானையே
வேதநூல்பயில் கின்றது வாயிலே
விகிர்தனூர்திரு வாலநல் வாயிலே. 2

காடுநீட துறப்பல கத்தனே
காதலால்நினை வார்தம கத்தனே
பாடுபேயொடு பூதம சிக்கவே
பல்பிணத்தசை நாடிய சிக்கவே
நீடுமாநட மாடவி ருப்பனே
நின்னடித்தொழ நாளுமி ருப்பனே
ஆடனீள்சடை மேவிய வப்பனே
ஆலவாயினின் மேவிய வப்பனே. 3

பண்டயன்றலை யொன்றும றுத்தியே
பாதமோதினர் பாவம றுத்தியே
துண்டவெண்பிறை சென்னியி ருத்தியே
தூயவெள்ளெரு தேறியி ருத்தியே
கண்டுகாமனை வேவ விழித்தியே
காதலில்லவர் தம்மை யிழித்தியே
அண்டநாயக னேமிகு கண்டனே
ஆலவாயினின் மேவிய கண்டனே. 4

சென்றுதாதை யுகுத்தனன் பாலையே
சீறியன்பு செகுத்தனன் பாலையே
வென்றிசேர்மழுக் கொண்டுமுன் காலையே
வீடவெட்டிடக் கண்டுமுன் காலையே
நின்றமாணியை யோடின கங்கையால்
நிலவமல்கி யுதித்தனன் கங்கையால்
அன்றுநின்னுரு வாகத் தடவியே
ஆலவாயர னாகத் தடவியே. 5

நக்கமேகுவர் நாடுமோ ரூருமே
நாதன்மேனியின் மாசுண மூருமே
தக்கபூமனைச் சுற்றக் கருளொடே
தாரமுய்த்தது பாணற் கருளொடே
மிக்கதென்னவன் தேவிக் கணியையே
மெல்லநல்கிய தொண்டர்க் கணியையே
அக்கினாமு துண்கல னோடுமே
ஆலவாயர னுருமை யோடுமே. 6

வெய்யவன்பல் லுகுத்தது குட்டியே
வெங்கண்மாசுணங் கையது குட்டியே
ஐயனேயன லாடிய மெய்யனே
யன்பினல்கினை வார்க்கருண் மெய்யனே
வையமுய்யவன் றுண்டது காளமே
வள்ளல்கையது மேவுகங் காளமே
ஐயமேற்ப துரைப்பது வீணையே
ஆலவாயரன் கையது வீணையே. 7

தோள்கள்பத்தொடு பத்து மயக்கியே
தொக்கதேவர் செருக்கை மயக்கியே
வாளரக்க னிலத்துக் களித்துமே
வந்தமால்வரை கண்டு களித்துமே
நீள்பொருப்பை யெடுத்தவுன் மத்தனே
நின்விரற்றலை யான்மத மத்தனே
ஆளுமாதி முறித்தது மெய்கொலோ
ஆலவாயர னுய்த்தது மெய்கொலோ. 8

பங்கயத்துள நான்முகன் மாலொடே
பாதநீண்முடி நேடிட மாலொடே
துங்கநற்றழ லின்னுரு வாயுமே
தூயபாடல் பயின்றது வாயுமே
செங்கயற்கணி னாரிடு பிச்சையே
சென்றுகொண்டுரை செய்வது பிச்சையே
அங்கியைத்திகழ் விப்ப திடக்கையே
ஆலவாயர னார திடக்கையே. 9

தேரரோடம ணர்க்குநல் கானையே
தேவர்நாடொறுஞ் சேர்வது கானையே
கோரமட்டது புண்ட ரிகத்தையே
கொண்டநீள்கழல் புண்ட ரிகத்தையே
நேரிலார்க ளழித்தது நாகமே
நீள்சடைத்திகழ் கின்றது நாகமே
ஆரமாக வுகந்தது மென்பதே
ஆலவாயர னாரிட மென்பதே. 10

ஈனஞானிகள் தம்மொடு விரகனே
ஏறுபல்பொருள் முத்தமிழ் விரகனே
ஆனகாழியுண் ஞானசம் பந்தனே
ஆலவாயினின் மேயசம் பந்தனே
ஆனவானவர் வாயினு ளத்தனே
யன்பரானவர் வாயினு ளத்தனே
நானுரைத்தன செந்தமிழ் பத்துமே
வல்லவர்க்கிவை நற்றமிழ் பத்துமே. 11

திருச்சிற்றம்பலம்.

பண் – புறநீர்மை

இராகம்-**பூபாளம்.**] [தாளம்-**திருபுடை.**

திருச்சிற்றம்பலம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே. 1

வெற்றவே யடியா ரடிமிசை வீழும்
விருப்பினன் வெள்ளைநீ றணியும்
கொற்றவன் றனக்கு மந்திரி யாய
குலச்சிறை குலாவிநின் றேத்தும்

ஒற்றைவெள் விடைய னும்பரார் தலைவன்
உலகினி லியற்கையை யொழிந்திட்
டற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற
ஆலவா யாவது மிதுவே. 2

செந்துவர் வாயாள் சேலன கண்ணாள்
சிவன்திரு நீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் பாண்டிமா தேவி
பணிசெயப் பாரிடை நிலவும்
சந்தமார் தரளம் பாம்புநீர் மத்தந்
தண்ணெருக் கம்மலர் வன்னி
அந்திவான் மதிசேர் சடைமுடி யண்ணல்
ஆலவா யாவது மிதுவே. 3

கணங்களாய் வரினும் தமியராய் வரினும்
அடியவர் தங்களைக் கண்டால்
குணங்கொடு பணியுங் குலச்சிறை குலாவுங்
கோபுரஞ் சூழ்மணிக் கோயில்
மணங்கமழ் கொன்றை வாளரா மதியம்
வன்னிவண் கூவிள மாலை
அணங்குவீற் றிருந்த சடைமுடி யண்ணல்
ஆலவா யாவது மிதுவே. 4

செய்யதா மரைமே லன்னமே யனைய
சேயிழை திருநுதற் செல்வி
பையர வல்குற் பாண்டிமா தேவி
நாடொறும் பணிந்தினி தேத்த

வெய்யவேற் சூலம் பாசமங் குசமான்
விரிகதிர் மழுவுடன் றரித்த
ஐயனா ருமையோ டின்புறு கின்ற
ஆலவா யாவது மிதுவே. 5

நலமில ராக நலமதுண் டாக
நாடவர் நாடறி கின்ற
குலமில ராகக் குலமதுண் டாகத்
தவம்பணி குலச்சிறை பரவும்
கலைமலி கரத்தன் மூவிலை வேலன்
கரியுரி மூடிய கண்டன்
அலைமலி புனல்சேர் சடைமுடி யண்ணல்
ஆலவா யாவது மிதுவே. 6

முத்தின்றாழ் வடமுஞ் சந்தனக் குழம்பும்
நீறும்தன் மார்பினில் முயங்கப்
பத்தியார் கின்ற பாண்டிமா தேவி
பாங்கொடு பணிசெய நின்ற
சுத்தமார் பளிங்கின் பெருமலை யுடனே
சுடர்மர கதமடுத் தாற்போல்
அத்தனா ருமையோ டின்புறு கின்ற
ஆலவா யாவது மிதுவே. 7

நாவணங் கியல்பாம் அஞ்செழுத் தோதி
நல்லராய் நல்லியல் பாகும்
கோவணம் பூதி சாதனங் கண்டால்
தொழுதெழு குலச்சிறை போற்ற

ஏவணங் கியல்பா மிராவணன் திண்டோள்
இருபது நெரிதர வூன்றி
ஆவணங் கொண்ட சடைமுடி யண்ணல்
ஆலவா யாவது மிதுவே. 8

மண்ணெலா நிகழ மன்னனாய் மன்னும்
மணிமுடிச் சோழன்றன் மகளாம்
பண்ணினேர் மொழியாள் பாண்டிமா தேவி
பாங்கினாற் பணிசெய்து பரவ
விண்ணுளா ரிருவர் கீழொடு மேலும்
அளப்பரி தாம்வகை நின்ற
அண்ணலா ருமையோ டின்புறு கின்ற
ஆலவா யாவது மிதுவே. 9

தொண்டரா யுள்ளார் திசைதிசை தோறுந்
தொழுதுதன் குணத்தினைக் குலாவக்
கண்டுநா டோறு மின்புறு கின்ற
குலச்சிறை கருதிநின் றேத்தக்
குண்டரா யுள்ளார் சாக்கியர் தங்கள்
குறியின்க ணெறியிடை வாரா
அண்டநா யகன்றா னமர்ந்துவீற் றிருந்த
ஆலவா யாவது மிதுவே. 10

பன்னலம் புணரும் பாண்டிமா தேவி
குலச்சிறை யெனுமிவர் பணியும்
அந்நலம் பெறுசீ ராலவா யீசன்
திருவடி யாங்கவை போற்றிக்

கன்னலம் பெரிய காழியுண் ஞான
சம்பந்தன் செந்தமி ழிவைகொண்
டின்னலம் பாட வல்லவ ரிமையோர்
ஏத்தவீற் றிருப்பவ ரினிதே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருப்பாசுரம்

### பண் - கௌசிகம்

இராகம் - பைரவி.] [தாளம் - ஆதி

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. 1

அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரிய ரேறுகந் தேறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரிய ராரறி வாரவர் பெற்றியே. 2

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தி யாஎழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யாரவ ரெவ்வகை யார்கொலோ. 3

ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும்
ஆதி மாண்பும்
கேட்பான் புகிலளவில்லை
கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையுங்
குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்
றிவைகேட்கத் தக்கார். 4

ஏதுக்க ளாலு மெடுத்த
மொழியாலு மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன்
எங்கள் சோதி
மாதுக்க நீங்க லுறுவீர்
மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கண் மிக்கீ ரிறையே
வந்து சார்மின்களே. 5

ஆடும் எனவும் அருங்கூற்றம்
உதைத்து வேதம்
பாடும் எனவும் புகழல்லது
பாவ நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும்
எனக்கேட் டீராகில்
நாடுந் திறத்தார்க் கருளல்லது
நாட்ட லாமே. 6

கடிசேர்ந்த போது மலரான
கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத்
தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட
முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் மறிவார்
சொலக் கேட்டுமன்றே. 7

வேத முதல்வன் முதலாக
விளங்கி வையம்
ஏதப் படாமை யுலகத்தவர்
ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே
முதலாப் பொலிந்த
சூத ணெலிமாலை யென்றே
கலிக்கோவை சொல்லே. 8

பாராழி வட்டம் பகையா
னலிந்தாட்ட வாடிப்
பேராழி யானதிடர் கண்டருள்
செய்தல் பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங்
கொண்ட வர்க்குப்
போராழி யீந்த புகழும்
புகழுற்ற தன்றே. 9

மாலா யவனும் மறைவல்ல
நான்மு கனும்
பாலாய தேவர்பக ரில்லமு
தூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க்
கரிதா யெழுந்த
ஆலால முண்டங்கம ரர்க்கருள்
செய்த தாமே. 10

அற்றன்றி யந்தண் மதுரைத்
தொகை யாக்கினானும்
தெற்றென்று தெய்வந் தெளியார்
கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர்வி னூரவும்
பண்பு நோக்கில்
பெற்றொன் றுயர்த்த பெருமான்
பெருமானு மன்றே. 11

நல்லார்கள் சேர்புகலி ஞானசம்
பந்த னல்ல
எல்லார் களும்பரவு மீசனை
யேத்து பாடல்
பல்லார் களுமதிக்கப் பாசுரஞ்
சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோ ருலகாளவும்
வல்ல ரன்றே. 12

திருச்சிற்றம்பலம்.



அப்பர்

அறப்பெரும் செல்வி பாகத்து
அண்ணல்அஞ் செழுத்தால் அஞ்சா
மறப்பெரும் செய்கை மாறா
வஞ்சகர் இட்ட நீல
நிறப்பெரும் கடலும் யார்க்கும்
நீந்துதற்கு அரிய ஏழு
பிறப்பெனும் கடலும் நீந்த
பிரானடி வணக்கம் செய்வாம்.

— பரஞ்சோதிமுனிவர்.

உ

சிவமயம்

# திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள்.

## திருநேரிசை

பண் – கொல்லி

இராகம் - நவரோஸ். ] [ தாளம் - ஆதி.

திருச்சிற்றம்பலம்

வேதியா வேதகீதா
விண்ணவ ரண்ணாவென்றென்
றோதியே மலர்கள்தூவி
யொருங்கிநின் கழல்கள்காணப்
பாதியோர் பெண்ணைவைத்தாய்
படர்சடை மதியஞ்சூடும்
ஆதியே யாலவாயில்
அப்பனே யருள்செயாயே. 1

நம்பனே நான்முகத்தாய்
நாதனே ஞானமூர்த்தி
என்பொனே யீசாவென்றென்
றேத்திநா னேசற்றென்றும்

பின்பினே திரிந்துநாயேன்
　　பேர்த்தினிப் பிறவாவண்ணம்
அன்பனே யாலவாயில்
　　அப்பனே யருள்செயாயே. 2

ஒருமருந் தாகியுள்ளாய்
　　உம்பரோ டுலகுக்கெல்லாம்
பெருமருந் தாகிநின்ருய்
　　பேரமு தின்சுவையாய்க்
கருமருந் தாகியுள்ளா
　　யாளும்வல் வினைகள்தீர்க்கும்
அருமருந் தாலவாயில்
　　அப்பனே யருள்செயாயே. 3

செய்யநின் கமலபாதஞ்
　　சேருமா தேவர்தேவே
மையணி கண்டத்தானே
　　மான்மறி மழுவொன்றேந்தும்
சைவனே சாலஞானம்
　　கற்றறி விலாதநாயேன்
ஐயனே யாலவாயில்
　　அப்பனே யருள்செயாயே. 4

வெண்டலை கையிலேந்தி
　　மிகவுமூர் பலிகொண்டென்றும்
உண்டது மில்லைசொல்லில்
　　உண்டது நஞ்சுதன்னைப்

பண்டுனை நினையமாட்டாப்
பளகனேன் உளமதார
அண்டனே யாலவாயில்
அப்பனே யருள்செயாயே. 5

எஞ்சலில் புகலிதென்றென்
றேத்திநா னேசற்றென்றும்
வஞ்சக மொன்றுமின்றி
மலரடி காணும்வண்ணம்
நஞ்சினை மிடற்றில்வைத்த
நற்பொருட் பதமேநாயேற்
கஞ்சலென் றாலவாயில்
அப்பனே யருள்செயாயே. 6

வழுவிலா துன்னைவாழ்த்தி
வழிபடுந் தொண்டனேனுன்
செழுமலர்ப் பாதங்காணத்
தெண்டிரை நஞ்சமுண்ட
குழகனே கோலவில்லீ
கூத்தனே மாத்தாயுள்ள
அழகனே யாலவாயில்
அப்பனே அருள்செயாயே. 7

நறுமலர் நீருங் கொண்டு
நாடொறு மேத்தி வாழ்த்திச்
செறிவன சித்தம்வைத்துத்
திருவடி சேரும்வண்ணம்

மறிகடல் வண்ணன் பாகா
மாமறை யங்க மாறும்
அறிவனே யாலவாயில்
அப்பனே அருள்செயாயே. 8

நலந்திகழ் வாயில் நூலாற்
சருகிலைப் பந்தர் செய்த
சிலந்தியை அரச தாள
அருளினை யென்று திண்ணம்
கலந்துடன் வந்து நின்தாள்
கருதிநான் காண்ப தாக
அலந்தனன் ஆல வாயில்
அப்பனே யருள்செ யாயே. 9

பொடிக்கொடு பூசிப் பொல்லாக்
குரம்பையிற் புந்தி யொன்றிப்
பிடித்துநின் தாள்க ளென்றும்
பிதற்றிநா னிருக்க மாட்டேன்
எடுப்பனென் றிலங்கைக் கோன்வந்
தெடுத்தலு மிருப துதோள்
அடர்த்தனே யாலவாயில்
அப்பனே யருள்செயாயே. 10

திருச்சிற்றம்பலம்.

## திருத்தாண்டகம்

இராகம்:— அரிகாம்போதி.

திருச்சிற்றம்பலம்

முளைத்தானை யெல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிருஞ் சடைமுடிமேன் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணுக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறுத்
தூமுத்த வெண்முறுவ லுமையோ டாடித்
திளைத்தானைத் தென்கூடற் றிருஆ லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே. 1

விண்ணுலகின் மேலார்கண் மேலான் றன்னை
மேலாடு புரமூன்றும் பொடிசெய் தானைப்
பண்ணிலவு பைம்பொழில்சூழ் பழனத் தானைப்
பசும்பொன்னி னிறத்தானைப் பால்நீற் றானை
உண்ணிலவு சடைக்கற்றைக் கங்கை யாளைக்
கரந்துமையோ டுடனாகி யிருந்தான் றன்னைத்
தெண்ணிலவு தென்கூடற் றிருஆ லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே. 2

நீர்த்திரளை நீள்சடைமேல் நிறைவித் தானை
நிலமருவி நீரோடக் கண்டான் றன்னைப்
பாற்றிரளைப் பயின்றாட வல்லான் றன்னைப்
பகைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தான் றன்னைக்

காற்றிரளாய் மேகத்தி னுள்ளே நின்று
கடுங்குரலா யிடிப்பானைக் கண்ணார் நெற்றித்
தீத்திரளைத் தென்கூடற் றிருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே. 3

வான மிதுவெல்லா முடையான் றன்னை
வரியரவக் கச்சானை வன்பேய் சூழக்
கானமதில் நடமாட வல்லான் றன்னைக்
கடைக்கண்ணால் மங்கையுமை நோக்கா வென்மேல்
ஊனமது வெல்லா மொழித்தான் றன்னை
யுணர்வாகி யடியேன துள்ளே நின்ற
தேனமுதைத் தென்கூடற் றிருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே. 4

ஊரானை யுலகேழாய் நின்றான் றன்னை
யொற்றைவெண் பிறையானை யுமையோ டென்றும்
பேரானைப் பிறர்க்கென்று மரியான் றன்னைப்
பிணக்காட்டில் நடமாடல் பேயோ டென்றும்
ஆரானை யமரர்களுக் கமுதீந் தானை
யருமறையான் நான்முகனு மாலும் போற்றும்
சீரானைத் தென்கூடற் றிருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே. 5

மூவனை மூர்த்தியை மூவா மேனி
யுடையானை மூவுலகுந் தானே யெங்கும்
பாவனைப் பாவ மறுப்பான் றன்னைப்
படியெழுத லாகாத மங்கை யோடு

மேவனை விண்ணோர் நடுங்கக் கண்டு
விரிகடலி னஞ்சுண் டமுத மீந்த
தேவனைத் தென்கூடற் றிருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே. 6

துறந்தார்க்குத் தூநெறியாய் நின்றான் றன்னைத்
துன்பந் துடைத்தாள வல்லான் றன்னை
இறந்தார்க ளென்பே யணிந்தான் றன்னை
யெல்லி நடமாட வல்லான் றன்னை
மறந்தார் மதின்மூன்று மாய்த்தான் றன்னை
மற்றொரு பற்றில்லா வடியேற் கென்றும்
சிறந்தானைத் தென்கூடற் றிருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே. 7

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் றன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடற் றிருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே. 8

பகைச்சுட ராய்ப் பாவ மறுப்பான் றன்னைப்
பழியிலியாய் நஞ்சுண் டமுதீந் தானை
வகைச்சுடராய் வல்லசுரர் புரமட் டானை
வளைவிலியா யெல்லார்க்கு மருள்செய் வானை

மிகைச்சுடரை விண்ணவர்கண் மேலப் பாலை
மேலாய தேவாதி தேவர்க் கென்றுந்
திகைச்சுடரைத் தென்கூடற் றிருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே. 9

மலையானை மாமேரு மன்னி னானை
வளர்புன் சடையானை வானோர் தங்கள்
தலையானை யென்தலையி னுச்சி யென்றுந்
தாபித் திருந்தானைத் தானே யெங்குந்
துலையாக வொருவரையு மில்லா தானைத்
தோன்றாதார் மதின்மூன்றுந் துவளவெய்த
சிலையானைத் தென்கூடற் றிருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே. 10

தார்த்தனைத் தோண்முடிபத் திறுத்தான் றன்னைத்
தொன்னரம்பி னின்னிசைகேட் டருள்செய் தானைப்
பார்த்தனைப் பணிகண்டு பரிந்தான் றன்னைப்
பரிந்தவற்குப் பாசுபத மீந்தான் றன்னை
ஆத்தனை யடியேனுக் கன்பன் றன்னை
யளவிலாப் பல்லூழி கண்டு நின்ற
தீர்த்தனைத் தென்கூடற் றிருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே. 11

திருச்சிற்றம்பலம்.



மணிவாசகர்.

எழுதரு மறைகள் தேறா
　　இறைவனை எல்லில் கங்குல்
பொழுதறு காலத்து என்றும்
　　பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமேல் ஏறத்
　　துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன்
　　அடியவர்க்கு அடிமை செய்வாம்.

—பரஞ்சோதிமுனிவர்.

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்துகூலிகொண்டக்கோவான்மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய்.

மாவார வேறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ.

சதுரை மறந்தறி மால்கொள்வர்
சார்ந்தவர்சாற்றிச் சொன்னேங்
கதிரை மறைத்தன்ன சோதி
கழுக்கடை கைப்பிடித்துக்
குதிரையின் மேல்வந்து கூடிடு
மேற்குடி கேடுகண்டீர்
மதுரையர் மன்னன் மறுபிறப்
போட மறித்திடுமே.

நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்சதேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே யவிநாசி
யப்பாபாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ
செய்வதொன்று மறியேனே.

திருச்சிற்றம்பலம்.

# திருக்கோவையார்

திருச்சிற்றம்பலம்

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்
பலத்தும்என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின்
ஆய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோஅன்றி
ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்(கு) என்கொ
லாம்புகுந் தெய்தியதே.

திருச்சிற்றம்பலம்.

# பதினொராந் திருமுறை

## திருமுகப் பாசுரம்

**மதிமலி புரிசை மாடக் கூடல்**
**பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற**
**கன்னம் பயில்பொழில் ஆல வாயின்**
**மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்**
**பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்**
**கொருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்**
**குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்**
**செருமா உகைக்குஞ் சேரலன் காண்க**
**பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்**
**தன்போல் என்பால் அன்பன் தன்பால்**
**காண்பது கருதிப் போந்தனன்**
**மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.**

## சிவபெருமான் திருவந்தாதி

*தேரோன் கதிரென்னுஞ் செந்தழலால் வெந்தெழுபேய்த்*
*தேரோன் கதிரென்னுஞ் செய்பொருள்நீ-தேராதே*
*கூடற்கா வாலி குரைகழற்கா நன்னெஞ்சே*
*கூடற்கா வாலிதரக் கூர்.*

*அமைவும் பிறப்பும் இறப்புமாம் மற்றுங்*
*கமைவும் பரமான ஆதி—அமையுந்*
*திருவால வாய்சென்று சேராது யாக்கள்*
*திருவால வாய்சென்று சேர்.*

# சொக்கநாத வெண்பா

திருச்சிற்றம்பலம்

ஆடரவஞ் சூழ்மதுரை அம்மானே அன்பருடன்
கூடவிளை யாடிவருங் கோமானே — நீடுபுகழ்
மென்மேலும் என்தனக்கு மேவியிடப் பொல்லாத
என்மேல் வினைகெடுப்பா யே.

எல்லாமும் வல்லசித்தர் என்றக்கால் என்னுடைய
பொல்லாக் கருத்தகற்றப் போகாதோ — வல்லாடும்
பொங்கரா வேணிப் புனிதா மதுரைநகர்ச்
சங்கரா சொக்கநா தா.

இறந்தும் பிறந்தும் இளைத்தேன் இனியான்
மறந்தும் பிறவா வரந்தா — சிறந்தபுகழ்
ஞாலவா யாமுடிக்கு நாட்டுசூ ளாமணியாம்
ஆலவாய்ச் சொக்கநா தா.

நித்தம் எழுந்தருளி நின்மலனே என்றனக்குப்
புத்தி மிகமிகவும் போதித்துச் — சித்தமயல்
போக்குவாய் இன்பசுக பூரணத்(து) இரண்டறவே
ஆக்குவாய் சொக்கநா தா.

உணர்த்தில் உணர்வேன் உணர்த்தாயேல் நாயேன்
கணத்தும் உணரும்வகை காணேன் — உணர்திஎன்னுட்
பூண்டமல மாயைகன்மம போக்கிச் சிவானந்தத்
தாண்டருள்வை சொக்கநா தா.

கெடுங்காலம் வந்தால் கெடுப்பை கதியில்
விடுங்காலம் வந்தால் விடுவை — கொடுந்தவங்கள்
பண்ணிடினும் பாவம் பயிற்றிடினும் ஆரேனும்
அண்ணலே சொக்கநா தா.

கால வசமோ கடியேன் வினைவசமோ
ஞாலவச மோஅருளை நாடியே — கோலமறச்
சிற்பரா நந்தவெள்ளம் சேர்ந்தறிந்தும் சேர்கிலேன்
தற்பரா சொக்கநா தா.

எக்காலம் இக்காயம் இற்றிடுமோ என்வினைகள்
எக்காலம் மும்மலங்கள் இற்றிடுமோ — எக்காலம்
ஆநந்த சாகரத்தில் ஆடிடுமோ என்னுளந்தான்
ஆநந்தா சொக்கநா தா-

நீரிலே மூழ்கினுமென் நித்தமருச் சிக்கினுமென்
பாரிலே சுற்றிப் பணியினுமென் — வேரிலே
உற்றிருந்தா லன்றோ உயிர்க்குறுதி ஒன்றிரண்டும்
அற்றவனே சொக்கநா தா.

ஆறுதலை இல்லை அடியேனுக் கன்பாகத்
தேறுதலை சொல்வார் சிலர்இல்லை — வேறெனக்குத்
திக்காரும் இல்லை சிவனே பழிக்கஞ்சி
சொக்கேநின் தாளே துணை.

வாக்கிலுரை பொய்யே மனம்நினைப்ப தும்கவடே
ஆக்கைதினம் செய்வ தகிர்த்தியமே — நோக்கில்
திரிவிதமும் இப்படிநீ செய்வித்தால் முத்தி
தருவிதமென் சொக்கநா தா.

இக்காலத் தின்னவினை என்றமைப்பை அப்படியே
அக்காலத் தவ்வூழ் அருத்திடுவை — இக்காலம்
தப்புவார் உண்டோ தமியேற்கும் தப்பரி(து) என்
அப்பனே சொக்கநா தா.

ஆலந் தரித்தலிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம் — பாலொளியாம்
அத்தனே கூடல் மதுரா புரிஉமையாள்
அத்தனே ஆலவா யா.

தன்னந் தனியே தமியேன் முறையிட்டால்
இன்னந் திருச்செவியில் ஏறாதோ — மன்னவனே
தென்மதுரை மேவித் திருந்திய செங் கோல்செலுத்துந்
தன்மதுரை நீயலவோ தான்.

கருணை நிதியே கடவுளே அன்பர்
பொருளான பேரின்பப் பொற்பே — ஒருநாளும்
நீங்கா தெனதறிவில் நின்றசுகா நந்தமே
ஆம்காண்நீ சொக்கநா தா.




THE TANJORE MAHARAJA
TANJORE

# சொக்கநாதக் கலித்துறை

கண்ணுக் கினிய பொருளாகி
　　யேயென் கரத்தில்வந்தாய்
விண்ணும் பரவிடும் அற்புத
　　மேயென்ன விஞ்சையிதான்
மண்ணும் புகழ்ந்திட என்னையும்
　　பூரண வாரியுள்ளே
நண்ணும் படிசெய் மதுரா
　　புரிச்சொக்க நாயகனே. 1

ஆதார மிந்நிலத் துன்னையல்
　　லால்எனக் காருளரோ
மீதான மான வெளியினைக்
　　காட்ட விரைந்துடன்வந்(து)
ஓதாம லோதி யெனைவச
　　மாக்கினை உள்ளொளியா
நாதா வருள்செய் மதுரா
　　புரிச்சொக்க நாயகனே. 2

கல்லது நெஞ்சம் இரும்பே
　　இருசெவி கண்கள்மரம்
சொல்லுவ தும்பொய் அவமே
　　தொழில்துக்க சாகரமாம்
அல்லலென் பங்குநின் அன்பர்பங்(கு)
　　ஆனந்த மாகவைத்தாய்
நல்லது நல்ல மதுரா
　　புரிச்சொக்க நாயகனே. 3

பாடும் படிசெய் நினைநினைந்
　　தேத்திப் பணிந்தெழுந்தே
ஆடும் படிசெய் மலமைந்து
　　மேயடி யேன்உளத்தே
வீடும் படிசெய்நின் ஆனந்த
　　சாகர மேலெனவே
நாடும் படிசெய் மதுரா
　　புரிச்சொக்க நாயகனே. 4

ஏறுத விண்ணப்பங் கூறுநின்
　　றேன்அஃ தேதெனிற்கேள்
மாறும விந்த மகாலிங்கந்
　　தன்னின் மகிழ்ந்திருந்தே
ஆறுப் பவத்துய ராற்றிச்
　　சிவானந்தம் அன்பர்க்கென்றும்
பேறுக நல்குதி மாமது
　　ராபுரிப் பிஞ்ஞகனே. 5

ஆகங் கரணம் புவனங்கள்
　　போகங்க ளானஎல்லா
மோகம் பொருந்தவைத் தாட்டுதி
　　யேழும் மலாதியெல்லாம்
போக விடுத்தெனக் கானந்தம்
　　காட்டப் பொறியுனக்கே
நாகம் அசைக்கு மதுரா
　　புரிச்சொக்க நாயகனே. 6

ஆடாம லாடிப் புலன்வழி
யிற்போ யனுதினமும்
வாடாமல் வாடி மயங்கல்நன்
றோமன வாக்கிறந்து
கூடாமற் கூடிச் சிவானந்த
வெள்ளக் குணக்கடலை
நாடாமல் நாட அருள்கூடல்
வாழ்சொக்க நாயகனே. 7

பொய்யா மலமறுத் தென்உளத்(து)
ஆனந்த பூரணத்தை
மெய்யா அளித்து விடாதுகண்
டாய்விடி லோகெடுவேன்
ஐயா எனதுயி ரேவினை
மார்க்கத் தழுந்தியென்றும்
நையா தருள்செய் மதுரா
புரிச்சொக்க நாயகனே. 8

பிறவாத சென்மம் அழுந்தாத
துன்பம் பிறந்தடியேன்
இறவாத தானமு முண்டுகொ
லோஎளி யேன்திரும்ப
அறவாவிங் கென்னை யினியாட்டல்
போதுநின் ஆனந்தத்தே
நறவார் பொழில்மன் மதுரா
புரிச்சொக்க நாயகனே. 9

செய்யாத பாதக மொன்றில்லை
ஒன்றொன்று செய்ததெல்லாம்
ஐயா வளவில்லை நீயே
யறிவை அஃதியார்செயலோ
மெய்யா வுயிர்க்குயி ரேயடி
யேன் இவ் வினையிலென்றும்
நையாமல் ஆள்வை மதுரா
புரிச்சொக்க நாயகனே. 10

அறிவைத் திருப்பிநின் பாதார
விந்தம் அடையவல்ல
நெறியைக் கொடுத்து நிறுத்தினை
யேநின்மலா இனிஎன்
பொறியைத் தவிர்த்துநின் ஆனந்த
சாகர பூரணத்தைப்
பிறிவற் றிருக்கவைப் பாய்எனை
ஆண்டருள் பிஞ்ஞகனே. 11

திருச்சிற்றம்பலம்.

# மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

காலத் தொடுகற் பனைகடந்த
கருவூ லத்துப் பழம்பாடற்
கலைமாச் செல்வர் தேடிவைத்த
கடவுள் மணியே! உயிரால

வாலத் துணர்வு நீர்பாய்ச்சி
வளர்ப்பார்க் கொளிபூத் தளிபழுத்த
மலர்க்கற் பகமே! எழுதாச்சொல்
மழலை ததும்பு பசுங்குதலைச்
சோலைக் கிளியே! உயிர்த்துணையாம்
தோன்றாத் துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியில்
துரியங் கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்தமுழு
முதலே! முத்தம் தருகவே
முக்கட் சுடர்க்கு விருந்திடுமும்
முலையாய்! முத்தம் தருகவே.

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கை அகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள்ளத்தில் அழ(கு)
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம்வாய்

மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே! வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக வருகவே.

திருச்சிற்றம்பலம்

# க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்

நாதன் விளையாட்(டு) அறுபத்து
நாலு நடத்துந் தமிழ்மதுரை
நாலா யிரத்து நானூற்று
நாற்பத் தொன்ப தருட்புலவர்
ஓதுந் தலைச்சங் கத்தினுக்கும்
உயர்நா னூற்று நாற்பதுடன்
ஒன்ப தான தமிழ்ப்புலவர்
ஒழியா இடைச்சங் கத்தினுக்கும்
வேத நிகர்நக் கீரர்முதல்
விரிவா நாற்பத் தொன்பதுபேர்
மேவும் கடைச்சங் கத்தினுக்கும்
விதிசொல் குருவாம் அகத்தியற்கும்
ஆதி குருவாம் ஆறுகுணத்(து)
அமலா தாலோ தாலேலோ
ஆல வாய்வாழ் ஆறுமுகத்(து)
ஐயா தாலோ தாலேலோ.

திருச்சிற்றம்பலம்

# மதுரைக் கலம்பகம்

தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்றாள்
தடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவும் தனிமுத லொருநீ
சவுந்தர மாறனா னதுவும்
குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர்
கொண்டதும் தண்டமிழ் மதுரம்
கூட்டுண வெழுந்த வேட்கையா லெனில்இக்
கொழிதமிழ்ப் பெருமையார் அறிவார்
பமரம்யாழ் மிழற்ற நறவுகொப் புளிக்கும்
பனிமலர்க் குழலியர் பளிக்குப்
பானிலா முன்றிற் றாநிலா முத்தின்
பந்தரிற் கண்ணிமை யாடா(து)
அமரர்நா டியரோ டம்மனை யாட
ஐயநுண் ணுசுப்பள வலவென்(று)
அமரரு மருளுந் தெளிதமிழ்க் கூடல்
அடலரா அலங்கல்வே ணியனே.

புழுகுநெய்ச் சொக்கர் அபிடேகச்
சொக்கர்கர்ப் பூரச்சொக்கர்
அழகிய சொக்கர் கடம்ப
வனச்சொக்கர் அங்கயற்கண்
தழுவிய சங்கத் தமிழ்ச்சொக்கர்
என்றென்று சந்ததம்நீ
பழகிய சொற்குப் பயன்தேர்ந்து
வா இங்(கு)என் பைங்கிளியே.

# பரிபாடல்

உலகம் ஒருநிறையாத் தானோர் நிறையாப்
புலவர் புலாக்கோலால் தூக்க—உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர். 1

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீரூர்; பூவின்
இதழகத் தனைய தெருவம்; இதழகத்(து)
அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்;
தாதின் அனையர் தண்தமிழ்க் குடிகள்;
தாதுண், பறவை அனையர் பரிசில் வாழ்நர்;
பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏம இன்துயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழா(து)எம் பேரூர் துயிலே. 2

தண்தமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லாம்
நின்று நிலைஇப் புகழ்பூத்தல் அல்லது
குன்றுதல் உண்டோ மதுரை கொடித்தேரான்
குன்றமுண் டாகு மளவு. 3

செய்யாட் கிழைத்த திலகம்போல் சீர்க்கொப்ப
வையம் விளங்கிப் புகழ்பூத்தல் அல்லது
பொய்யாத லுண்டோ மதுரை புனைதேரான்
வையையுண் டாகு மளவு. 4

கார்த்திகை காதில் கனமகர குண்டலம்போல்
சேர்த்து விளங்கித் திருப்பூத்தல் அல்லது
கோத்தையுண் டாமோ மதுரை கொடித்தேரான்
வார்த்தையுண் டாகு மளவு. 5

ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்துவக்கும்
சேய்மாடக் கூடலும் செவ்வேள் பரங்குன்றும்
வாழ்வாரே வாழ்வார் எனப்படுவார் மற்றையார்
போவாரார் புத்தேள் உலகு. 6

திருச்சிற்றம்பலம்.

# திருப்புகழ்

அலகில வுணரைக் கொன்ற தோளென
மலைதுளை உருவச்சென்ற வேலென
அழகிய கனகத் தண்டை சூழ்வன புண்டரிக
அடியென முடியிற் கொண்ட கூதளம்
எனவன சரியைக் கொண்ட மார்பென
அறுமுக மெனநெக் கென்ப லாமுரு கன்புருதோ
கலகல கலெனக் கண்ட பேரொடு
சிலுகிடு சமயப் பங்க வாதிகள்
கதறிய வெகுசொற் பங்க மாகிய பொங்களாவும்
கலைகளு மொழியப் பஞ்ச பூதமு
மொழியுற மொழியிற் றுஞ்சு குதன
கரணமு மொழியத் தந்த ஞானமி ருந்தவாறென்

இலகுக டலைகற் கண்டு தேனொடு
மிரதமு றுதினைப் பிண்டி பாகுடன்
இனிமையி னுகருற் றெம்பி ரானொரு கொம்பினாலே
எழுதென மொழியப் பண்டு பாரதம்
வடகுல சிகரச் செம்பொன் மேருவில்
எழுதிய பவளக் குன்று தாதையை அன்றுசூழ
வலம்வரு மளவிற் சண்ட மாருத
விசையினும் விசையுற் றெண்டி சாமுக
மகிதல மடையக் கண்டு மாசுணம் உண்டுலாவு
மரகத கலபச் செம்புள் வாகன
மிசைவரு முருகச் சிம்பு ளேயென
மதுரையில் வழிபட்டும்ப ரார்தொழு தம்பிரானே.

ஆனைமுக வற்கு நேரிளைய சுத்த
ஆறுமுக முற்ற அழகோனே
ஆதியர னுக்கும் வேதமுதல் வற்கும்
ஆரணமு ரைத்த குருநாதா
தானவர்கு லத்தை வேல்கொடுது ணித்த
சாரசதுர் மிக்க திறல்வீரா
தாளிணைக ளுற்று மேவியப தத்தில்
வாழ்வொடுசி றக்க அருள்வாயே
வானெழுபு விக்கு மாலுமய னுக்கும்
யாவரொரு வர்க்கும் அறியாத
மாமதுரை சொக்கர் மாதுமைக ளிக்க
மாமயில் நடத்து முருகோனே

தேனெழுப னத்தில் மான்விழிகு றத்தி
சேரமரு வுற்ற திரள்தோளா
தேவர்கள்க ருத்தில் மேவியப யத்தைத்
தீரவிடு வித்த பெருமாளே.

திரைவஞ்ச இருவினைகள் நரையங்க மலமழிய
சிவகங்கை தனில்முழுகி விளையாடிச்
சிவம்வந்து குதிகொளக வடிவுன்றன் வடிவமென
திகழுண்டர் முனிவர்கண மயன்மாலும்
அரன்மைந்த னெனகளிறு முகனெம்பி எனமகிழ
அடியென்க ணளிபரவ மயிலேறி
அயில்கொண்டு திருநடன மெனதந்தை உடன்மருவி
அருமந்த பொருளையினி அருள்வாயே
பரியென்ப நரிகள்தமை நடனங்கொ டொருவழுதி
பரிதுஞ்ச வருமதுரை நடராஜன்
பழியஞ்சி எனதருகி லுறைபுண்ட ரிகவடிவ
பவளஞ்செ லுமைகொழுநன் அருள்பாலா
இருள்வஞ்ச கிரியவுண ருடனெங்க ளிருவினையு
மெரியுண்டு பொடியஅயில் விடுவோனே
எனதன்பி லுரைசயில மகிழ்வஞ்சி குறமகளொ
டெணுபஞ்சணையின்மருவு பெருமாளே.

பரவு நெடுங்கதி ருலகில் விரும்பிய
பவனி வரும்படி அதனாலே
பகர வளங்களு நிகர விளங்கிய
இருளை விடிந்தது நிலவாலே

வரையினி லெங்கணு முலவி நிறைந்தது
வரிசை தரும்பத     மதுபாடி
வளமொடு செந்தமி ழுரைசெய் அன்பரு
மகிழ வரங்களும்     அருள்வாயே
அரகர சுந்தர அறுமுக என்றுனி
அடியர் பணிந்திட     மகிழ்வோனே
அசலநெடுங்கொடி உமையமை தன்சுத
குறமக ளிங்கித     மணவாளா
கருதரு திண்புய சரவண குங்கும
களபம ணிந்திடு     மணிமார்பா
கனகமி கும்பதி மதுரை வளப்பதி
அதனில் வளர்ந்தருள்     பெருமாளே.

வள்ளமுலைப்     பொதுமாதர்
மயலதனிற்     படியாதே
கள்ளம்விடுத்     துனதாளே
கருதவருட்     பெறுவேனோ
உள்ளமறைப்     பொருளோனே
உமைமகிழ்நற்     புதல்வோனே
தெள்ளுதமிழ்க்     குரியோனே
திருமதுரைப்     பெருமாளே.



சேர்க்கை:

உ

குருபாதம்

## தருமபுர ஆதீனம் இயற்றிவரும் பணிகள்

தேவார பாடசாலை நிறுவித் தெய்வத் தமிழ் வளர்ப்பது.

சிவாகம பாடசாலை வைத்துத் திருக்கோயில் பூசைகளைப் பயிற்றுவிப்பது.

சிவஞான நூல்களைத் தெளிவுற அச்சிட்டு வழங்குவது.

சமய நுணுக்கங்களை நூல்களாக வெளியிடுவது.

தலங்கள் தோறும் திருப்பதிகங்கள் வெளியிடுவது.

அறிஞரைக் கொண்டு ஆலயம் தோறும் அறவுரை வழங்குவது.

பிரசார வாகனத்தின் மூலம் தமிழ்நாடெங்கும் சமயம் வளர்ப்பது.

ஆங்கிலக் கலாசாலைகளில் தமிழ்ப்பரிசு அமைப்பது.

ஆதீனக் கோயில்தோறும் பண்ணிசைத் தமிழ் வளர்ப்பது.

தமிழ்க் கல்லூரி நிறுவி வித்துவான் தேர்விற்கனுப்புவது.

வடமொழிக் கல்லூரி நிறுவிச் சிரோமணித் தேர்விற்கு அனுப்புவது.

ஏழிசையும் இனிதோங்க இசைப்பிரிவு அமைப்பது.

நாலாராய்ச்சிகள் எழுதுவித்து வழங்குவது.

விஞ்ஞான மெய்ஞ்ஞான நூல்களை வெளியிடுவது.

சமய நூல்களைத் தக்க முறையில் வெளியிடுவது.

சமயக் கூட்டங்களுக்குத் தக்கன செய்வது.

தமிழ்ப்பணி செய்பவர்க் குதவுவது.

தமிழ்நாட்டுத் தலவரலாறு எழுதுவித்து வழங்குவது.

புத்தகசாலை யமைத்துப் பழந்தமிழ் நூல்களைப் பாதுகாப்பது.

நாடோறும் ஹரிஜன மாணவர்களுக்கு அன்னமளிப்பது.

பொருளும் புத்தகமும் அளித்து ஏழை மாணவர்களுக்கு உதவுவது.

அடிக்கடி ஆதுலர்க்கு அறுசுவையுண்டி யளிப்பது.